இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 24 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 16 – சனிக்கிழமை 02 செப்டம்பர் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 24: Thiruvalluvar Year - 2054 - Aavani 16 - Saturday 02 September 2023 - Kovai ★★ 12 Pages ₹5.00

## நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்த

# மும்பையில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஆலோசனை!

## சோனியா காந்தி – முதல்வர் மு.க.ஸ்டாலின் – ராகுல் காந்தி உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!






மும்பை, செப்.2–

**இந்தியா கூட்டணியின் 3வது ஆலோசனைக் கூட்டம் மும்பையில் தொடங்கியது. காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.**

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.கவிற்கு எதிராகக் கூட்டணி அமைப்பது குறித்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. பீகார் மாநிலம் பாட்னாவில் எதிர்க்கட்சித் தலைவர்களின் முதல் கூட்டம் கடந்த ஜூன் மாதம் 23ஆம் தேதி நடைபெற்றது. இதையடுத்து எதிர்க் கட்சித் தலைவர்களின் 2ஆவது ஆலோசனைக் கூட்டம் பெங்களூருவில் கடந்த ஜூலை மாதம் 17 மற்றும் 18 ஆகிய இரு தேதிகளில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இக்கூட்டணிக்கு இந்தியா எனப் பெயரிடப்பட்டது.

இந்நிலையில், இந்தியா கூட்டணியின் 3வது ஆலோசனை கூட்டம் மும்பையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை தொடங்கியது. 2 நாட்கள் இக்கூட்டம் நடைபெற்றது. முன்னதாக இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக மும்பை வந்த தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலி னுக்கு விமான நிலையத்தில் தி.மு.க. மற்றும் மும்பைவாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். காங்கிரஸ், சிவசேனா மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் அரங்கிற்கு வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அனைத்துக் கட்சி தலைவர்களும் வரவேற்றனர்.

இக்கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, மேற்குவங்க முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி ஆகியோரும் பங்கேற்றனர். டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன், மகாராஷ்டிர முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே, உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் டி.ராஜா, பீகார் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், கூட்டணிக்கான ஒருங்கிணைப்புக் குழு, தேர்தல் மேலாண்மை குழு அமைப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இந்தியா கூட்டணிக்கு அதிகாரபூர்வ செய்தி தொடர்பாளர்களை அறிவிப்பது, ஊடக, சமூக ஊடக குழுக்களை அறிவிப்பது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும், இந்தியா கூட்டணியின் லோகோ வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கூட்டணி தொடர்பாக பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக, கூட்டணிக்கான பொதுவான குறைந்தபட்ச செயல் திட்டத்தை உருவாக்குவதற்கும், நாடு முழுவதும் பா.ஜ.க. அரசின் தோல்வி குறித்து போராட்டங்கள் நடத்துவதற்கும், கூட்டு பிரசார உத்திகளை வகுப்பது குறித்தும் தனித்தனி குழுக்கள் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

மும்பை கூட்டம் தொடர்பாக சிவசேனா கட்சி தலைவர்கள் உத்தவ் தாக்கரே மற்றும் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் ஆகியோர் மும்பையில் அளித்த பேட்டியில், ‘‘மும்பை கூட்டத்தில் 28 கட்சிகளை சேர்ந்த 63 தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். ஒட்டுமொத்த நாட்டையும் தங்கள் குடும்பமாக கருதும் எதிர்க்கட்சிகள் பாரத மாதாவை காக்க ஒன்றிணைந்துள்ளன. எங்களின் கொள்கைகள் வெவ்வேறாக இருக்கலாம், ஆனால் நோக்கம் ஒன்றே. இந்த நாட்டையும், ஜனநாயகத்தையும் காக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் ஒன்றிணைந்துள்ளோம். எங்கள் கூட்டணியில் பிரதமர் வேட்பாளராக பல முகங்கள் உள்ளன. ஆனால் பா.ஜ.க.வில் மோடியை தாண்டி வேறு யாராவது உண்டா? பிரதமர் மோடிக்கு சகோதரிகள் மீது திடீர் பாசம் வந்துள்ளது. இந்த 9 ஆண்டில் ஒருமுறை கூட ரக்ஷா பந்தன் வரவில்லையா? இந்தியா கூட்டணி வளர வளர, காஸ் சிலிண்டரை இலவசமாக கூட கொடுப்பார்கள். அவர்கள் எதைச் செய்தாலும் அதைப் பற்றி கவலையில்லை. மக்கள் புத்திசாலிகள், அவர்கள் அனைத்தையும் அறிவார்கள்’’ என்றனர்.

மகாராஷ்டிரா காங்கிரஸ் தலைவர் நானா படோல் அளித்த பேட்டியில், ‘‘மும்பை கூட்டத்தில் இந்தியா கூட்டணி ‘பா.ஜ.க. சலே ஜாவோ (பா.ஜ.க. வெளியேறு)‘ என்ற முழக்கத்தை உருவாக்கும்’’ என்று கூறியுள்ளார். சமீபகாலமாக பிரதமர் மோடி, எதிர்க்கட்சிகளை குறிவைத்து ‘ஊழல் வெளியேறு’ என பேசி வருகிறார். இதற்கு பதிலடி தரும் வகையில் ‘பா.ஜ.க. வெளியேறு’ என்ற முழக்கத்தை இந்தியா கூட்டணி அறிவிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

**பா.ஜ.க. கூட்டணி கட்சிகளும் வர உள்ளன**

மேலும், ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் மனோஜ் ஜா கூறுகையில், ‘‘தற்போதைய ஆட்சியின் பிற்போக்கு கொள்கைகளுக்கு முற்போக்கான மாற்றீட்டை வழங்குவதற்கான தெளிவான திட்ட வரைபடத்துடன் மும்பை கூட்டம் அமையும்’’ என கூறினார். இந்தியா கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய இருப்பதாக பீகார் முதல்வர் நிதிஷ் குமார் சமீபத்தில் கூறியிருந்தார். இந்நிலையில், காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் அலோக் சர்மா அளித்த பேட்டியில், ‘‘பா.ஜ.க. தனது தேசிய ஜனநாயக கூட்டணியில் 38 கட்சிகள் இருப்பதாக கூறி வருகிறது. இக்கூட்டணியில் மேலும் சில கட்சிகள் சேர வாய்ப்புள்ளதாக தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

அதில் உள்ள சுமார் 5 கட்சிகள் இந்தியா கூட்டணியில் இணைய பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இன்னும் பல கட்சிகள் இந்தியா கூட்டணிக்கு வர உள்ளன. புதிதாக இணையும் கட்சிகள் குறித்து அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படும்’’ என்றார்.

**பிரதமர் பதவிக்காக சேரவில்லை:**

ஆம் ஆத்மி கட்சி எம்.பி. ராகவ் சதா நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், ‘‘பிரதமர் பதவிக்காக இந்தியா கூட்டணியில் ஆம் ஆத்மி சேரவில்லை. பிரதமர் போட்டியில் அரவிந்த் கெஜ்ரிவால் கிடையாது. பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மக்கள் மீது திணித்துள்ள வேலையில்லா திண்டாட்டம், விலைவாசி உயர்வு, பணவீக்கம் போன்றவற்றின் தீமைகள் மற்றும் கொடுமைகளில் இருந்து நாட்டை விடுவிப்ப தற்கும், சிறந்த இந்தியாவை உருவாக்குவதற்கும்தான் இந்தியா கூட்டணியில் இணைந்துள்ளோம்’’ என்றார்.

முன்னதாக அக்கட்சியின் தலைமை தேசிய செய்தி தொடர்பாளர் பிரியங்கா கக்கார், கெஜ்ரிவால் பிரதமர் வேட்பாளராக களமிறக்க தகுதியானவர் என கூறியதைத் தொடர்ந்து ராகவ் சதா பதிலளித்தது குறிப்பிடத்தக்கது.

**லோகோ வெளியீடு**

மும்பையில் நேற்று நடைபெற்ற இந்தியா கூட்டணிக் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இந்தியா கூட்டணிக்கான லோகோ வெளியிடப்பட்டது.

---

## தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (4)!

### செப்டம்பர் 3 - அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை யொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று முன்பே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, செப்டம்பர் 3 ஞாயிறு அன்று முரசொலி சிறப்பிதழ், “பத்திரிகையாளர்தம் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**— ஆசிரியர்.**

---

4 மாவட்டங்களில்

## கனமழைக்கு வாய்ப்பு!

*சென்னை, செப்.2-*

*தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*


*சென்னையைப் பொருத்தவரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.*

*நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும்.*

*மீனவர்கள் (செப்.3,4) தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.*

---

**ரூ.7.5 இலட்சம் கோடி ஊழலை திசை திருப்ப, சமையல் எரிவாயு சிலிண்டர் 200 ரூபாய் குறைப்பு!**



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 02-09-2023

# பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழிக்கும் சி.ஏ.ஜி.- 2

### ★ இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் முறைகேடு:

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் உருவாக்கிய விமான எஞ்சினில் வடிவ குளறுபடிகள் இருந்ததால் 159 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம், ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து சி.ஏ.ஜி. ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளது. அதில், இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம், விமான எஞ்சின்களுக்கான வடிவமைப்பு மற்றும் மேம்பாடு நடவடிக்கைகளை சரியாக திட்டமிடவில்லை, அல்லது அதனுடன் தொடர்புடைய அபாயங்கள் குறித்து அது சிந்திக்கவில்லை என்றும், இதனால், 159 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கோர் என்ஜின்களின் வடிவமைப்புக்குத் தேவையான பொருட்களை கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்படும் என்பதை முன்கூட்டியே உணரத் தவறிய காரணத்தால், தரம் குறைந்த பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, எஞ்சின்கள் உற்பத்தி செய்யப்பட்டதாகவும், பின்னர் இந்தத் தவறை உணர்ந்து கொண்ட இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிர்வாகம், ஆரம்பத்தில் திட்டமிட்ட பொருட்களை கொள்முதல் செய்ய அனுமதி அளித்ததாகவும், இதுவே 159 கோடி ரூபாய் இழப்பு ஏற்படக் காரணம் என்றும் சி.ஏ.ஜி குறிப்பிட்டுள்ளது.

மேலும் இரண்டு வகையான என்ஜின்கள் உருவாக்குவதற்கு இடையில் உள்ள தொழில்நுட்ப இடைவெளி பகுப்பாய்வு செய்யப்படவில்லை என்றும் சி.ஏ.ஜி. அறிக்கை குற்றஞ் சாட்டியுள்ளது.

### ★ ரயில்வே துறை:

ரயில்வே துறையிலும் பல்வேறு குளறுபடிகள் நடந்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது சி.ஏ.ஜி அறிக்கை.

2021-22 ஆம் ஆண்டில் ரயில்வே துறை, 100 ரூபாய் வருவாய் ஈட்டுவதற்காக 107 ரூபாய் செலவழித்துள்ளதாகவும், இதன் காரணமாக இந்திய ரயில்வேயின் நிதிநிலை கவலைக்குரியதாக மாறிவிட்டதாகவும் சி.ஏ.ஜி. அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### ★ ஓய்வூதியத் திட்டங்கள்:

ஒன்றிய அரசின் பல்வேறு ஓய்வூதியத் திட்டங்களில் 2017 முதல் 2021 ஆம் ஆண்டுவரை ஆய்வு செய்ததில், பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாக சி.ஏ.ஜி. அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது. குறிப்பாக ஓய்வூதியத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி, ஒன்றிய அரசின் விளம்பரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு முறைகேடு நடந்திருப்பதை அம்பலப்படுத்தியுள்ளது.

ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகம், முதியோர் ஓய்வூதியத் திட்டங்களை உள்ளடக்கிய தேசிய சமூக உதவித் திட்ட நிதி, வேறு சில திட்டங்களை விளம்பரப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சி.ஏ.ஜி. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய சமூக உதவித் திட்டம் என்பது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு முதியோர், மாற்றுத்திறனாளிகள், கைம்பெண் மற்றும் குடும்பத்தில் வருவாய் ஈட்டுவோரின் இறப்பு போன்றவற்றில் சமூக உதவிப் பலன்களை வழங்குவதாகும். ஆனால், இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதி, ஒன்றிய அரசின் விளம்பரங்களுக்கு பயன்படுத்தப்படுவது முறையற்றது என்று விமர்சித்துள்ளது சி.ஏ.ஜி.

### ★ சுங்கச்சாவடி முறைகேடுகள்:

**நாடுமுழுவதும் சுமார் 600 சுங்கச்சாவடிகள் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் 55 சுங்கச்சாவடிகள் உள்ளன. சுங்கச்சாவடிகளில் காலவரம்பை மீறி சுங்கக்கட்டணம் வசூலித்து, கட்டணக்கொள்ளை நடைபெறுவதாக ஏற்கனவே குற்றஞ்சாட்டு உள்ள நிலையில், இந்தக் குற்றச்சாட்டை சி.ஏ.ஜி. அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.**

**சுங்கக்கட்டணம், நெடுஞ்சாலைகள் பராமரிப்பு, நெடுஞ்சாலைகளில் உள்ள வசதிகள் குறித்து தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய 5 தென் மாநிலங்களில் உள்ள 5 சுங்கச்சாவடிகளை மட்டும் மத்திய தணிக்கைக் குழு ஆய்வு செய்தது. 5 சுங்கச்சாவடிகளை மட்டும் தணிக்கை செய்ததில், விதிகளுக்குப் புறம்பாக வாகன ஓட்டிகளிடம் இருந்து 132 கோடியே 5 லட்சம் ரூபாயை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வசூலித்திருப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை.**

சி.ஏ.ஜி. தணிக்கை செய்த சுங்கச்சாவடிகளில் ஒன்று தமிழ்நாட்டில் உள்ள பரனூர் சுங்கச்சாவடி. பரனூர் சுங்கச்சாவடி அமைந்துள்ள தாம்பரம் முதல் திண்டிவனம் வரையிலான 4 வழிச்சாலையை 8 வழிச்சாலையாக விரிவாக்கம் செய்யும் பணிகளிலும், இரும்புலியூர் - வண்டலூர் மற்றும் வண்டலூர் - கூடுவாஞ்சேரி ஆகிய சாலைகளின் இரண்டாம் கட்டப் பணிகளிலும் அதிகபட்ச தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் திட்டங்களில், தாமதமாகும் காலங்களில் சுங்கக்கட்டணத்தில் 75சதவீதம் மட்டுமே வசூலிக்க வேண்டும் என்பது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் விதிமுறை. ஆனால், இந்த விதிமுறைகளைப் புறக்கணித்து 2018 ஆகஸ்ட் முதல் 2021 மார்ச் வரை பரனூர் சுங்கச்சாவடியில் 6 கோடியே 54 லட்சம் ரூபாய், பொதுமக்களிடமிருந்து முறைகேடாக வசூலிக்கப்பட்டுள்ளது. ஒரே ஒரு சுங்கச்சாவடியில் மட்டும் ஆறரை கோடி ரூபாய் என்றால், நாடுமுழுவதும் ஆய்வு செய்தால் பல ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு வெளிச்சத்திற்கு வரும்.

**இதேபோல், தேசிய நெடுஞ்சாலைகளில் 1956 செப்டம்பர் மாதத்துக்கு முன்னதாகக் கட்டப்பட்ட பாலங்களுக்கு சுங்கக்கட்டணம் வசூலிக்கக்கூடாது என்பது விதி. ஆனால், திண்டிவனம் அருகே பாலாற்றின் குறுக்கே 1954-ல் கட்டப்பட்ட பாலத்தைக் கடக்க கட்டணம் வசூலித்துள்ளனர். 2017 முதல் 2021-ஆம் ஆண்டு வரை பாலாற்றுப் பாலத்தில் விதிமுறைகளை மீறி, வாகன ஓட்டிகளிடம் 28 கோடி ரூபாய் முறைகேடாக வசூலிக்கப் பட்டுள்ளது. மேலும், தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களின் இரண்டு பிரிவுகளில் சலுகை ஒப்பந்தங்களில் வருவாய்ப் பகிர்வுக்கான ஒதுக்கீடு இல்லாததால், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 133 கோடியே 36 லட்சம் ரூபாய் வருவாயை இழந்துள்ளது. இந்த இழப்பானது, குறிப்பிட்ட சிலருக்கு லாபத்தைக் கொடுத்துள்ளது. இந்தத் தணிக்கையை நாடுமுழுவதும் விரிவுபடுத்தினால் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு பல லட்சம் கோடி ரூபாய் இழப்புகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டறிய முடியும் என குற்றஞ்சாட்டியுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை.**

- தொடரும்




கடலூர் ஒன்றுபட்ட மாவட்ட இளைஞரணி கழுதூரில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெறும், இளைஞரணி மாநில மாநாட்டிற்கு அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன் ஆகியோர் முன்னிலையில், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் ரூபாய் 10. லட்சத்திற்கான காசோலை மற்றும் வெள்ளி செங்கோல் வழங்கினார். உடன் மண்டல பொறுப்பாளர் அப்துல் மாலிக், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் மற்றும் கடலூர் கிழக்கு, மேற்கு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

## பா.ஜ.க. ஆட்சியின் அலங்கோலங்களை - நச்சுக்கருத்துகளை அம்பலப்படுத்துவோம்!

# இந்தியாவைக் காப்பாற்றும் கடமை நம் அனைவர் கைகளிலும் இருக்கிறது!

## ‘Speaking for India’ என்ற தலைப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார்!

**சென்னை, செப். 2-**

**வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. ஆட்சியின் அலங்கோலங்களை - நச்சுக் கருத்துக்களை அம்பலப்படுத்தும் வகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘Speaking for India’ எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.**

**கழகத் தலைவர் அவர்கள் ஆற்றும் இவ்வுரை ஆங்கிலத்திலும், இந்தியாவின் பல்வேறு மாநில மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியாகிறது.**

**“இந்திய நாட்டைக் காப்பாற்றும் கடமை, நம் அனைவர் கைகளிலும் இருக்கிறது” என இது தொடர்பான அறிவிப்பில், இத்திட்டத்திற்கான நோக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அவ்வறிவிப்பு வருமாறு:-**

சமூகநீதி, மதச்சார்பற்ற அரசியல், சமதர்மம், சமத்துவம், மாநில சுயாட்சி, கூட்டாட்சிக் கருத்தியல் ஆகியவை உள்ளதே இணையற்ற இந்தியா.

ஒரே மதம், ஒரே மொழி, ஒரே உணவு, ஒரே பண்பாடு, ஒரே தேர்வு, ஒரே தேர்தல் உள்ளிட்டவையெல்லாம், பலவகைப்பட்ட மக்கள் வாழும் இந்தியாவை உருக்குலைக்கும் நச்சுக் கருத்துகள்.

குமரி முதல் இமயம் வரையிலான பரந்து விரிந்த இந்திய நாட்டைக் காப்பாற்றும் கடமை நம் அனைவர் கைகளிலும் இருக்கிறது என்ற நோக்கோடு, பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின் அலங்கோலங்களை அம்பலப்படுத்தியும், பன்முகத் தன்மை கொண்ட, வலுவான மாநிலங்கள் கொண்ட, மதச்சார்பற்ற இந்தியாவைக் காப்பாற்றுவது குறித்தும், கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், Podcast (குரல்பதிவுத் தொடர்) வடிவில், Speaking for India என்ற தலைப்பில் பேச இருக்கிறார். இத்தொடர் ஆங்கிலத்திலும், இந்தியாவின் பல்வேறு மாநில மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டும் வெளியாகவுள்ளது.

இவ்வாறு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘இண்டியா’ கூட்டணியின் 2 நாள் கூட்டம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மும்பையில் உற்சாக வரவேற்பு!

## பல்வேறு கட்சியினர் - முன்னணியினர் திரண்டு வரவேற்றனர்!

**மும்பை, செப். 2 -**

**“இந்தியா” கூட்டணி ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க மும்பை சென்றுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.**

**விமான நிலையத்தில் மும்பை கழகத்தினரும், நிர்வாகிகளும், இந்தியா கூட்டணிக் கட்சியின் முன்னணித் தலைவர்களும், நிர்வாகிகளும், திரளாக பங்கேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு பொன்னாடைகள் அணிவித்தும், புத்தகங்கள் வழங்கியும், சிறப்பான வரவேற்பு அளித்தனர்.**

இந்தியா கூட்டணியின் 2 நாள் ஆலோசனை கூட்டம் மும்பையில் நேற்று முன்தினம் மாலை தொடங்கியது. இக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, தமிழ்நாடு முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், பீகார் முதல்வர் நிதிஷ்குமார், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.

கூட்டணி கட்சித் தலைவர்களை வரவேற்று மும்பை நகரம் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது. ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து நேற்று முன்தினம் காலை மும்பை புறப்பட்டுச் சென்றார். மும்பை சென்றடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் தி.மு.க. மற்றும் தமிழர்கள் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். காங்கிரஸ், சிவசேனா மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் வரவேற்றனர்.

**‘இண்டியா’ கூட்டணியின் இலச்சினை!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோரும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். ஆலோசனை கூட்டத்தின் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் இந்தியா கூட்டணியின் லோகோ வெளியிடப்பட்டது.

இந்தியா கூட்டணியின் முதல் கூட்டம் பீகார் தலைநகர் பாட்னாவில் ஜூன் 23ஆம் தேதி நடைபெற்றது. 2-வது கூட்டம் கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் 18-ந் தேதி நடைபெற்றது. தற்போது 3-வது கூட்டம் 31.08.2023 மற்றும் 1.9.2023 ஆகிய இரு தினங்கள் மும்பையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் வியூகம், தேர்தலில் மோடி அரசை வீழ்த்துவது, ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத செயல்பாடுகளை மக்களிடையே எடுத்துரைப்பது குறித்தும் விவாதிக்கப் பட்டது.



திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் புதிதாக கழிவறைகள் கட்டுவதற்கான இடத்தினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (31.08.2023) நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. கி.கார்த்தியேன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உடல்நலக் குறைவால் மறைவெய்திய சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கே.சாமிதுரை அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (31.08.2023) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது மகனும், கேரள உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியுமான எஸ்.மணிக்குமார் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

### இன்னமும், சனாதனக் கூட்டத்தின் அந்த வன்மம் மறையவேயில்லை!

# ‘தினமனு’வுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வன்மையான கண்டனம்!

### பள்ளிகளில் முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை கொச்சைப்படுத்தும் ‘தினமலர்’ ஏடு!

சென்னை, செப். 2 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிகளுக்கு கொண்டு வந்த வரலாற்றுச் சிறப்பு கொண்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை கொச்சைப் படுத்தியும், கல்வி நிலையங்களை அவமானப்படுத்தும் வகையிலும் சேலத்திலிருந்து வெளிவரும் ‘தினமலர்’ ஏடு அருவருக்கத்தக்க செய்தியை வெளியிட்டுள்ளது.

பள்ளிகளில் இருவேளை உணவினால் கக்கூஸ் நிறைகிறது என கேவலமான ஒரு செய்தியை வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறது ‘தினமலர்’ ஏடு.

வக்கிரப் புத்தியோடு வெளியான ‘தினமலர்’ ஏட்டின் செய்திக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளப் பதிவில் கூறுகையில், இன்னமும் சனாதனக் கூட்டத்தின் அந்த வன்மம் மறையவே இல்லை எனவும், ‘தின மனு’வுக்கு எனது வன்மையான கண்டனங்கள் எனவும் தெரிவித்துள்ளார்.




சேலம் ‘தினமலர்’ நாளிதழில் வெளிவந்துள்ள முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்த தலைப்புச் செய்திக்கு கண்டனம் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உழைக்க ஓர் இனம் உண்டு கொழுக்க ஓர் இனம் என மனுவாதிகள் கோலோச்சிய காலத்தில் ‘எல்லார்க்கும் எல்லாம்’ எனச் சமூகநீதி காக்க உருவானதுதான் திராவிடப் பேரியக்கம்.**

**‘சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியை மட்டும் கொடுத்து விடாதே’ என்பதை நொறுக்கி, கல்விப்புரட்சியை உருவாக்கிய ஆட்சி திராவிட இயக்க ஆட்சி.**

**நிலவுக்குச் சந்திரயான் விடும் இந்தக் காலத்திலேயே சனாதனம் இப்படியொரு தலைப்புச் செய்தியைப் போடுமானால், நூறு ஆண்டுகளுக்கு முன் என்ன ஆட்டம் ஆடியிருக்கும்? எளியோர் நிலை எப்படி இருந்திருக்கும்? இன்னமும் அந்த வன்மம் மறையவேயில்லை!**

**‘தினமனு’வுக்கு எனது வன்மையான கண்டனங்கள்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### தெலங்கானா மாநிலத்திலும் செயல்படுத்த திட்டம்!

# இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

### காலை உணவுத்திட்டம் செயல்படும் விதம் குறித்து அறிய சென்னைக்கு வருகை தந்த தெலங்கானா மாநில அரசு அதிகாரிகள் பாராட்டு!

சென்னை, செப். 2 -

இந்தியாவுக்கு வழிகாட்டுகிறது முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என்று காலை உணவுத் திட்டம் செயல்படும் விதம் குறித்து அறிய சென்னைக்கு வருகை தந்த தெலங்கானா மாநில அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

அரசுப் பள்ளி மாணவர்களுக்கென பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு முன்னெடுத்து வருகிறது. இத்தகைய திட்டங்களில் ஒன்றான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்கச் செய்திருக்கிறது.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். முதற்கட்டமாக 1,543 பள்ளிகளில் 1.14 லட்சம் மாணவர்களுக்கு திட்டம் தொடங்கப்பட்டது. அடுத்தக் கட்டமாக இந்த ஆண்டு ஆகஸ்ட் 25-ஆம் தேதி தொடங்கி தமிழ்நாடு முழுவதும் உள்ள 31,008 பள்ளிகளில் பயிலும் 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 18 லட்சம் மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினார் முதலமைச்சர் அவர்கள்.



தமிழ்நாட்டில் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் காலை உணவு திட்டச் செயல்பாடுகளை தெலங்கானா அதிகாரிகள் வருகை தந்து ஆய்வு செய்தனர்.

இந்தத் திட்டத்தின் மாபெரும் வெற்றி இந்தியா முழுக்க பெரும் வரவேற்பையும் பாராட்டுதல்களையும் பெற்று வருகிறது. இதைத் தொடர்ந்து தெலுங்கானா மாநிலத்திலும் செயல்படுத்தும் அம்மாநில அரசு ஆர்வம் கொண்டிருக்கிறது. அதற்காக தமிழ்நாடு அரசை தொடர்பு கொண்டு தமிழ்நாடு அரசின் காலை உணவுத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நேரில் வந்து பார்வையிட அம்மாநில உயர் அலுவலர்கள் ஆர்வம் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து தெலுங்கானா மாநில அரசு தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொண்டதன் பேரில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட தெலங்கானாவிலிருந்து மூத்த அரசு அதிகாரிகள் ஆகஸ்ட் 30, 2023 அன்று சென்னை வந்து சேர்ந்தனர். ஆகஸ்ட் 31, 2023 அன்று மைய சமையல்கூடம் ஒன்றுக்கும் பல்வேறு பள்ளிகளுக்கும் சென்று பார்வையிட்டனர்.

ஸ்மிதா சபர்வால் (தெலங்கானா முதலமைச்சரின் செயலாளர்)

டாக்டர். கிறிஸ்டினா. இசட் சொங்து ( அரசுச் செயலாளர், பழங்குடியினர் நலத் துறை)

கருணா வக்காட்டி (அரசுச் செயலாளர், கல்வித் துறை)

ப்ரியங்கா வர்கீஸ் (தெலங்கானா முதலமைச்சரின் சிறப்புப் பணி அலுவலர்)

பாரதி ஹொல்லிக்கேரி (அரசு சிறப்புச் செயலாளர்)

பெண்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் துறை ஆகியோர் தெலங்கானா மாநில அரசு அதிகாரிகள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

**இராயபுரத்தில்**

முதலில் ராயபுரத்தில் இருக்கும் சென்னை மாநகராட்சி பள்ளிக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் காலை உணவு தயார் செய்யும் மைய சமையல் கூடத்தை இக்குழுவினர் பார்வையிட்டனர். அங்கு சமையல் பொருட்கள் பெறப்படும் விதம், பணியாளர்கள் பணியாற்றும் தன்மை, சுகாதாரமாக உணவு தயாரிக்கப்படும் முறை, தரபரிசோதனைகள் செய்யப்படும் விதம், தயாரிக்கப்பட்ட உணவு வாகனங்கள் மூலம் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் முறை, வாராந்திர உணவு அட்டவணை முதலான ஒவ்வொன்றையும் பற்றி பணியாளர்களோடும் நம் மாநில அலுவலர்களோடும் உரையாடி அறிந்து கொண்டனர்.

காலை ஏழு மணிக்கு பார்வையிடத் தொடங்கிய தெலங்கானா குழுவினர் எட்டு மணிக்கு மைய சமையல் கூடத்திலிருந்து புறப்பட்டு அருகில் இருக்கும் ஆரத்தூன் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி உருது தொடக்கப் பள்ளிக்குச் சென்றது. அங்கே மாணவர்களுக்கு உணவு எவ்விதம் வழங்கப்படுகிறது என்பதைப் பார்வையிட்டு மாணவர்களோடு உரையாடி மாணவர்களின் கருத்துகளையும் அறிந்து கொண்டனர்.

**திருவள்ளூர் மாவட்டத்தில்**

உருது தொடக்கப் பள்ளியில் பார்வையிட்ட பின்னர் திருவள்ளூர் மாவட்டம் அழிஞ்சி வாக்கத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சென்ற குழுவினர் அங்கே கிராமப்புறப் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளில் இந்தத் திட்டம் எப்படி சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறது என்பதையும் நடைமுறைப் படுத்துவதில் இருக்கும் சவால்களை தமிழ்நாடு அரசு எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதையும் அரசு அலுவலர்களிடமும் ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் உரையாடி தெரிந்து கொண்டனர்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் க.இளம்பகவத், தெலங்கானா மாநில அரசு அதிகாரிகள் குழுவோடு உடன் சென்று, அவர்களுக்கு வேண்டிய தகவல்களைத் தந்து இத்திட்ட செயல்பாடுகளையும் விளக்கினார். சமூகநலத்துறை கூடுதல் ஆணையர் திருமதி. கார்த்திகா, சென்னை மாநகராட்சி வடக்கு மண்டல துணை ஆணையர் சிவகுரு பிரபாகரன், திருவள்ளுவர் கூடுதல் ஆட்சியர் சுகபுத்திரா ஆகியோர் இந்த ஆய்வில் பங்கு பெற்றனர்.

திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் கண்ட தெலங்கானா மாநிலத்தின் அரசு அதிகாரிகள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை பற்றியும் அது செயல்படுத்தப்படும் விதம் குறித்தும் பாராட்டினர்.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் பாராட்டு!**

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கு தெலங்கானா ஆளுநர் தமிழிசை வரவேற்பு தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் காலை உணவு திட்டம், நாட்டிற்கே முன்மாதிரியான திட்டம் என பல தரப்பினரும் பாராட்டி வருகின்றனர். அத்திட்டத்தை தங்களது மாநிலத்திலும் செயல்படுத்தும் நோக்கில் தெலுங்கானா மாநில அரசு அதிகாரிகள் சென்னையில் உள்ள அரசுப் பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டனர். இது குறித்து தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்திரராஜனிடம் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த ஆளுநர் தமிழிசை, காலை உணவு திட்டம் நல்ல திட்டம், இதில் மாற்று கருத்து இல்லை என்றும், குழந்தைகளுக்கு காலை உணவு கொடுப்பதை தான் வரவேற்பதாகவும் கூறினார். பசியோடு யாரும் இருக்கக்கூடாது என்ற அவர், ஊட்டச்சத்து குறைபாடுகள் அதிகமாக குழந்தைகளிடம் காணப்படுவதாகவும், மருத்துவர் என்ற முறையில் நல்ல சத்தான உணவு கொடுக்கப்படுவதை வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

### மணப்பாறை அருகே – விபத்தில் உயிரிழந்த

# குடும்பத்தினருக்கு முதல்வர் ஆறுதல்!

### காயமுற்றோருக்கு உரிய சிகிச்சை வழங்க உத்தரவு!

சென்னை, செப். 2 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

விருதுநகர் மாவட்டம், செங்கமலநாச்சியார்புரம் ஊராட்சி மன்றத் தலைவர் கருப்பசாமி அவர்களும், கிருஷ்ணபேரி ஊராட்சி மன்றத் தலைவரான திருமதி. வினோதினி அவர்களின் கணவரான அபிமன்னன் அவர்களும், ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களைச் சந்தித்து மனு கொடுக்கச் சென்னைக்குக் காரில் சென்று கொண்டிருந்தபோது, மணப்பாறை அருகே ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தனர் என்ற துயரச் செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறேன்.

கருப்பசாமி மற்றும் அபிமன்னன் ஆகியோரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அப்பகுதி மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் கோமதி சங்கர் (நடுவப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. பாண்டிச்செல்வியின் கணவர்) அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கவும் அறிவுறுத்தியுள்ளேன். விபத்தில் காயமடைந்தோர் அனைவரும் விரைவில் நலம்பெற விழைகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



திருவல்லிக்கேணி தி.மு.க. முன்னாள் பகுதிச் செயலாளர் க.வே.செழியன் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஐஸ்ஹவுஸ் புரம் பிரகாசம் சாலையில் சமபந்தி விருந்து நடந்தது. இதில் தயாநிதிமாறன் எம்.பி. கலந்துகொண்டு பொதுமக்களுக்கு உணவு பரிமாறினார். இதில், மாவட்டச் செயலாளர், மாநகராட்சி நிலைக்குழு தலைவர் சிற்றரசு, பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், ஆர்.என்.துரை, க.வே.மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கத்தில் நேற்று முன்தினம் (31.08.2023) பல்வேறு துறைகள் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அரசு செயலாளர் மரு.தாரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், ஆவடி காவல் ஆணையரக ஆணையாளர் கே.சங்கர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.கே.ஜெயக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீபாஸ் கல்யாண் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் (திருவள்ளூர்), ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), எஸ்.சந்திரன் (திருத்தணி), சுதர்சனம் (மாதவரம்), டி.ஜெ.கோவிந்தராஜன் (கும்மிடிப்பூண்டி), க.கணபதி (மதுரவாயல்), துரை சந்திரசேகர் (பொன்னேரி) மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. ராஜ்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மரு.என்.ஓ.சுகபுத்ரா ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்பகராஜ் இ.ஆ.ப, சார் ஆட்சியர் (பொன்னேரி) செல்வி.ஐஸ்வர்யா ராமநாதன் ஆவடி துணை காவல் ஆணையர் திருமதி. ஜெயலட்சுமி, உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில்

# 140 கோடி இந்தியர்களையும் உளவு பார்க்கிறது மோடி அரசு!

## இஸ்ரேலில் இருந்து புதிய உளவு மென்பொருள் வாங்கியது!

லண்டன், செப்.2-

இஸ்ரேலில் இருந்து வாங்கிய புதிய சாப்ட்வேர் மூலம் 140 கோடி இந்தியர்களையும் உளவு பார்க்கும் வேலையை மோடி அரசு தொடங்கி உள்ளதாக லண்டன் பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்த சாப்ட்வேரில் இருந்து இமெயில், வாட்ஸ்அப், மெசேஜ், போன் கால் உள்பட எதுவும் தப்பாது, அத்தனையும் கண்காணிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியாவில் 2019ம் ஆண்டு பெகாசஸ் மென்பொருள் மூலம் எதிர்க்கட்சி தலைவர்கள், பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள், முக்கிய தொழில் அதிபர்களை பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ அரசு உளவு பார்ப்பதாகவும், அனைவரது செல்போனும் ஒட்டுக்கேட்கப்படுவதாகவும் பரபரப்பு புகார் எழுந்தது.

இதை ஒன்றிய அரசு அப்போது மறுத்தது. இருப்பினும் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி தனது செல்போன் ஒட்டுக்கேட்கப்படுவதாக தெரிவித்தார். 2021ஆம் ஆண்டும் இந்த குற்றச்சாட்டு எழுந்தது. இதை தொடர்ந்து பெகாசஸ் ஸ்பைவேர் பற்றி வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது, அதில் ஒரு இணைப்பு மூலம் மொபைல் போன்களை ஹேக் செய்து மின்னஞ்சல்கள், அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளை ரகசியமாக பதிவு செய்ததாக கூறியது.

நாடாளுமன்ற தேர்தல் தற்போது நெருங்கி வரும் நேரத்தில் இஸ்ரேலில் இருந்து வாங்கிய இன்னொரு சாப்ட்வேர் மூலம் உளவுபார்க்கும் வேலையை மோடி அரசு தொடங்கி இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த முறை முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் தொழில் அதிபர்கள் என்று இல்லாமல் ஒட்டுமொத்தமாக நாட்டில் உள்ள 140 கோடி மக்களையும் உளவு பார்க்கும் பணியை மோடி அரசு தொடங்கி இருப்பதாக லண்டனில் இருந்து வெளியாகும் பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகை செய்திகளை வெளியிட்டு உள்ளது.

140 கோடி இந்தியர்களின் அத்தனை செல்போன் அழைப்புகள், மெசேஜ், வாட்ஸ்அப் கால், இமெயில், இன்டர்நெட் உபயோகம் உள்ளிட்ட அத்தனையும் திருடப்படுகிறது. இதற்காக அதிகம் அறியப்படாத இஸ்ரேலிய சாப்ட்வேர் குழுக்கள் கடலுக்கு அடியில் பதிக்கப்பட்டுள்ள கேபிள் கரையை தொடும் இடத்தில் அமைக்கப்பட்டுளள கேபிள் நிலையங்களில் நிறுவப்பட்ட கண்காணிப்பு உபகரணங்களில் இருந்து இந்த தகவல்களை திருடிக் கொள்வதாகவும், அத்தனை அழைப்புகளையும் பதிவு செய்வதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ள கடலுக்கு அடியில் போடப்பட்டுள்ள கேபிள்கள் வாயிலாக இஸ்ரேலிய உளவு சாப்ட்வேர் நிறுவனங்கள் இந்தியா முழுவதும் வசிக்கும் 140 கோடி மக்களின் அத்தனை தகவல்களையும் திருடி, மோடி அரசிடம் ஒப்படைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் அத்தனை பேரின் தகவல்களும், போன் அழைப்புகளும் சல்லடையாக சலிக்கப்பட்டு, தேவைக்கேற்ப இந்திய பாதுகாப்பு நிறுவனங்களுக்கு வழங்க வசதியாக புதிய மென்பொருள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 140 கோடி பேரின் தகவல்களையும் தேடவும், நகல் எடுக்கவும், அதை பதிவு செய்யவும், பாதுகாக்கவும் தேவையான வசதிகள் இந்திய அரசுக்கு இஸ்ரேல் மென்பொருள் நிறுவனத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தகவல் தொடர்பு சந்தையின் வளர்ச்சியின் வேகம், சக்திவாய்ந்த கண்காணிப்பு கருவிகளை விற்க போட்டியிடும் நிறுவனங்களின் தொழில்துறை இதற்கு உதவி செய்துள்ளது. வீகியர், காக்னிட், செப்டியர் ஆகிய இஸ்ரேல் நிறுவனங்கள் தான் இந்த வேலையை மோடி அரசுக்காக செய்து கொடுக்கின்றன. இந்த நிறுவனங்களின் விளம்பரங்களிலும் இது போன்ற வேலைகளை செய்வதாக விளம்பரப்படுத்தி உள்ளது. செப்டியரின் விளம்பர வீடியோவின்படி, அதன் தொழில்நுட்பம் மூலம் குரல் பதிவு, மெசேஜ், வாட்ஸ்அப் கால், மெசேஜ், இமெயில் தகவல் ஆகியவற்றை தனித்தனியாக பிரித்தெடுக்கிறது. மற்றொரு இஸ்ரேலிய நிறுவனமான காக்னிட் இந்தியாவில் கண்காணிப்பு தயாரிப்புகளை வழங்குகிறது.

2021 ஆம் ஆண்டில் அட்லாண்டிக் கவுன்சிலால் எச்சரிக்கப்பட்ட நிறுவனங்களில் செப்டியரும் ஒன்றாகும். தற்போது அந்த நிறுவனத்துடன் இந்திய மக்கள் அனைவரையும் உளவு பார்க்க மோடி அரசு கைகோர்த்துள்ளதாக பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டு உள்ளது. உலகெங்கிலும் உள்ள நாடுகளில் நீர்மூழ்கிக் கப்பல் கேபிள் திட்டங்களில் பணிபுரிந்த 4 பேர், இந்தியா தற்போது 140 கோடி பேரின் தகவல்களை திரட்ட கொடுத்துள்ள அனுமதி அசாதாரணமானது என்று கூறியுள்ளனர். இந்தஅனுமதி மூலம் தொலைதொடர்பு நிறுவனங்கள் வெளிப்படையாகக் கண்காணிப்பு உபகரணங்களை கேபிள் லேண்டிங் ஸ்டேஷன்கள் மற்றும் டேட்டா சென்டர்களில் நிறுவ அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த இஸ்ரேல் நிறுவனங்களின் அனைத்து கண்காணிப்பு கோரிக்கைகளும் நாட்டின் உள்துறை செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டு, இந்த கண்காணிப்பு கண்டிப்பாக கட்டுப்படுத்தப்படுவதாக மோடி அரசு தெரிவித்து உள்ளது. ஆனால் இது வெற்று கட்டுப்பாடு.

இதன் மூலம் எந்தவித பயனும் இல்லை. இந்திய மக்கள் அனைவரின் தகவல்களும் திருடப்படுவது உறுதி என்று இந்த கேபிள் திட்டங்களில் பணிபுரிந்தவர்கள் தெரிவித்து உள்ளனர். இந்தியாவில் 140 கோடி பேரின் தகவல்களை திருட இஸ்ரேல் நாட்டின் செப்டியர் நிறுவனம், தன்னுடைய சட்டப்பூர்வ இடைமறிப்பு தொழில்நுட்பத்தை முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் ஜியோ, வோடபோன் ஐடியா மற்றும் சிங்கப்பூரின் சிங்டெல் உள்ளிட்ட தொலைத்தொடர்பு குழுக்களுக்கு விற்றுள்ளது. இதனால் இஸ்ரேல் உளவு நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள அத்தனை பேரையும் உளவு பார்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. லண்டன் பைனான்சியல் டைம்ஸில் வெளியான இந்த தகவல் நாடு முழுவதும் உள்ள அனைவரையும் அதிர்ச்சி அடைய செய்து உள்ளது.

2011 ஆம் ஆண்டில் இந்திய உள்துறை அமைச்சகம், ஒவ்வொரு மாதமும் 7,500 முதல் 9,000 பேரின் செல்போன்களை அரசு காரணத்திற்காக ஒட்டுகேட்பதாக தெரிவித்தது.

பைனான்சியல் டைம்ஸில் வெளியான செய்தி மூலம் இஸ்ரேலிய தொழில்நுட்ப நிறுவனங்களான காக்னிட் மற்றும் செப்டியர்களிடமிருந்து சக்திவாய்ந்த கண்காணிப்பு கருவிகளை வாங்குவதன் மூலம் பிரதமர் மோடி தலைமையிலான அரசு தனது குடிமக்களை உளவு பார்க்கிறது என்று குற்றம் சாட்டியுள்ளது.

2021 ஆம் ஆண்டில் பல நாடுகளில் உள்ள பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படும் பல நிறுவனங்களில் காக்னிட்டும் இருப்பதாக மெட்டா குற்றம் சாட்டியது.

உகாண்டா, ருவாண்டா நாடுகள் போல் இந்தியாவிலும் தற்போது அனைத்து மக்களின் செல்போன்களும் ஒட்டுமொத்தமாக உளவு பார்க்கப்படுவதாக பைனான்சியல் டைம்ஸ் தெரிவித்து உள்ளது.

**ஒன்றிய அரசு பதில் அளிக்க மறுப்பு!**

தங்கள் நாட்டு சட்டதிட்டப்படி, ஒப்பந்தப்படி உளவு மென்பொருள் விற்பனை செய்யப்பட்டதாக செப்டியர் நிறுவனம் தகவல் தெரிவித்து உள்ளது. ஆனால் இந்திய அரசு மற்றும் காக்னிட், வீகியர், ரிலையன்ஸ் ஜியோ, சிங்டெல் ஆகிய நிறுவனங்கள் இதுபற்றிய கேள்விக்கு எந்தவித பதிலும் அளிக்கவில்லை என்று பைனான்சியல் டைம்ஸ்தெரிவித்து உள்ளது.

**ஒப்புக்கொண்டது வோடபோன்!**

இஸ்ரேல் உளவு நிறுவனங்களிடம் இருந்து உளவு மென்பொருள் வாங்கியதாக வோடபோன் நிறுவனம் ஒப்புக்கொண்டதாக பைனான்சியல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. அந்த செய்தியில்,' ஒன்றிய அரசின் கடும் நிபந்தனைகள் அடிப்படையில் உளவு நிறுவனத்திடம் இருந்து லைசென்ஸ் பெற்றோம். இந்த நிபந்தனை காலம் எப்போது வேண்டுமானாலும் மாறலாம்' என்று தெரிவித்ததாக குறிப்பிட்டு உள்ளது.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு மத்திய ஒன்றியம் மற்றும் பாலக்கோடு பேரூர்க் கழக BLA2 வாக்குச்சாவடி முகவர்களுக்கு பயிற்சி மற்றும் ஆலோசனைக் கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில், பாலக்கோடு மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.முனியப்பன் மற்றும் பாலக்கோடு பேரூர்க் கழகச் செயலாளர் பி.கே.முரளி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது.கூட்டத்தில் கலந்து கொண்டு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம். பெ.சுப்பிரமணி, அவைத்தலைவர் கே.மனோகரன், மாநில பொறுப்பாளர்கள் சூடப்பட்டி. சுப்ரமணி, சத்யமூர்த்தி, மாவட்ட பொருளாளர் முருகன், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.மணி மற்றும் பேரூர்க் கழக நிர்வாகிகள். சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### காலை உணவுத் திட்டம் தொடர்பாக

# பள்ளி இளம் மாணவர்கள் வரைந்த ஓவியம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!



சென்னை,செப்.2–

கிருஷ்ணராயபுரம் ஒன்றிய நடுநிலைப் பள்ளி இளம் மாணவர்கள் காலை உணவுத் திட்டம் தொடர்பாக ஓவியம் ஒன்றை வரைந்து 'உண்டி கொடுத்தோர்... உயிர் கொடுத்தோரே!' என்று அதில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த ஓவியம் – டிராயிங் எப்படியாவது சி.எம். சாருக்கு அனுப்ப முடியுமா என்று ஆர்வமாக பிடிசாம்பலுக்கு கேட்டிருந்தார். அவரும் இதை தமது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டு முதலமைச்சர் கவனத்தை ஈர்த்தார்.

ட்விட்டர் மூலம் இதைக் கவனித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

**இந்தக் குழந்தைகளின்**
**மகிழ்ச்சிக்கு முன்பு**
**அத்தனை பொய் பரப்புரைகளும்**
**தோற்றேபோகும்!**
**அவர்களின் ஓவியத் திறன்**
**மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்**

என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டி தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### அதானி நிறுவனங்களில் பல ஆயிரம் கோடி முறைகேடாக முதலீடு குறித்து

# நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் ராகுல் காந்தி பேட்டி!

மும்பை,செப்.2-

அதானி நிறுவனங்களில் பல ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடாக முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தியாவிலிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய், சட்டவிரோதமாக கடத்தப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டி காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பேட்டியளித்துள்ளார்.



அதானி முறைகேடு விவகாரத்தில் பிரதமர் மோடி தொடர்ந்து மவுனம் சாதிப்பது ஏன்? என்றும், அதானியின் முறைகேடுகள் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை தேவை என்றம் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

அதானி நிறுவனத்தில் முறைகேடாக முதலீடு செய்யப்பட்ட பல ஆயிரம் கோடி ரூபாய் யாருடையது என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், இது குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தி உள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, அதானி நிறுவனத்தின் முறைகேடுகள் குறித்து பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை சுட்டிக்காட்டினார். இந்தியாவிலிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய், சட்டவிரோதமாக கடத்தப்பட்டு, மீண்டும் முதலீடாக அதானி நிறுவனத்திற்கு வந்துள்ளதாகவும், அதானி நிறுவனத்தின் முறைகேடுகள் இந்தியாவின் நன்மதிப்பிற்கு உலக அரங்கில் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளதாக ராகுல்காந்தி தெரிவித்தார்.

அதானி நிறுவன முறைகேடுகள் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அதானி நிறுவனத்தில் முறைகேடாக முதலீடு செய்யப்பட்ட பல்லாயிரம் கோடி ரூபாய் யாருடையது என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் ராகுல்காந்தி வலியுறுத்தினார்.

100 கோடி டாலர்களுக்கும் மேல் மதிப்புள்ள பணம் இந்தியாவில் இருந்து பல நாடுகளுக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. பின்னர், இந்தப் பணம் இந்தியாவுக்கு திரும்பி உள்ளது. இந்தப் பணம் யாருடையது? பிரதமருக்கு நெருக்கமான ஒருவர் (அதானி) இதனை செய்ய எப்படி அனுமதிக்கப்படுகிறார் என்று கேள்வி எழுப்பிய ராகுல் காந்தி இந்தியாவின் நன்மதிப்பிற்கு உலக அரங்கில் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது என்றும் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

"அதானி குழுமம் பங்கு முறைகேட்டில் ஈடுபட்டிருப்பதாக ஓசிசிஆர்பி (OCCRP) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற இரண்டு பொருளாதார பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு, கேள்விகளை எழுப்பியுள்ளன. இந்தியாவில் இருந்து கோடிக்கணக்கான ரூபாய் பல்வேறு நாடுகள் வழியாகச் சென்று மீண்டும் இந்தியாவுக்கு திரும்பி உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பணம் யாருடையது? அதானியுடையதா அல்லது வேறு யாருடையதா?


கவுதம் அதானியின் சகோதரர் வினோத் அதானியும், அவருடன் சேர்ந்து இரண்டு வெளிநாட்டவர்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு வெளிநாட்டவர்கள் எவ்வாறு அனுமதிக்கப்பட்டார்கள்? இதில் தனக்கு தொடர்பு இல்லை என்பதை பிரதமர் மோடி நிரூபிக்க வேண்டும்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகி இருக்கிறது. இது பிரதமர் மோடிக்கு ஏற்பட்டிருக்கும் பதற்றத்தின் அறிகுறியாக இருக்கலாம். நாடாளுமன்றத்தில் நான் பேசியபோது அவருக்கு பதற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாகவே, எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி திடீரென ரத்தானது. தற்போதைய அதானி விவகாரம், பிரதமருக்கு மிக நெருக்கமாக இருப்பதால், அவர் பதற்றத்தில் இருப்பதாக நினைக்கிறேன். அதானி விவகாரத்தை தொடும் போதெல்லாம், பிரதமர் மிகவும் சங்கடமாகவும், மிகவும் பதற்றமாகவும் இருக்கிறார்" என்று ராகுல் காந்தி மேலும் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் பொ. பத்மநாபன்

**செப்டம்பர் 2 (1991)**



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "அண்ணா விருது" பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





திருவள்ளூர் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், 2வது மாநில மாநாடு வரும் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெறவிருக்கிறது. இளைஞர் அணி வரலாற்றில் இடம்பெறவுள்ள சேலம் மாநாட்டின் ஆக்கப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, ஆவடியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் நாடு போற்றும் முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத்திட்டங்களை, நாளேடு மூலம் அவதூறு செய்யும் சனாதன சக்திகளை வீழ்த்துவோம் என எடுத்துரைத்தும், கழகத்தலைவர் அவர்களின் கட்டளையை ஏற்று மாநாட்டை வெற்றி பெறச்செய்வோம் என வாக்குறுதி அளித்த இளைஞரணி நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் எம்.எம்.ஏ., திருத்தணி சந்திரன் எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

### பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு

# மனிதாபிமான அடிப்படையில் பதிலளித்து உதவிடுவீர்!

## ரூ.35.83 கோடி மதிப்பில் 912 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கி அதிகாரிகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

திருவள்ளூர், செப். 2 -

பொதுமக்கள் தரும் கோரிக்கை மனுக்களுக்கு மனிதாபிமானத்துடன் பதிலளித்து அவர்களுக்கு அதிகாரிகள் உதவிட வேண்டும் என்று, ரூ.35.83 கோடி மதிப்பில் 912 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கத்தில் நேற்று முன்தினம் (31.08.2023) பல்வேறு துறைகள் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட ரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பல்வேறு துறைகள் சார்பாக 912 பயனாளிகளுக்கு ரூ.35.83 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்து ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது:

இந்த ஆய்வுக்கூடத்தை பொறுத்தவரை, முதல்வரின் முகவரியில் தரப்படும் மனுக்களுக்கு தரமான பதில்கள் தருவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மக்கள் தங்கள் கோரிக்கைகளை குறைகளை மனுக்கள் மூலமாகத்தான் தெரிவிப்பார்கள். இந்த மனுக்களின் மீது குறித்த காலத்திற்குள் பதில் அளிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மனுக்களுக்கு பதில் தந்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தில் இல்லாமல் உங்கள் துறைக்கானது அல்ல என்று தெரிந்தாலும். அந்த நபருக்கு வேறு ஏதேனும் வகையிலாவது உதவலாம் என்று மனிதாபிமானத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஏழை எளிய மக்கள், மாற்றுத் திறனாளிகள் பெண்கள் ஆகியோர் தரும் மனுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பதில் அளிக்குமாறும் உதவுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**உழவர் சந்தைகள்**

ஏழை எளிய மக்கள் தரும் மனுக்களை வெறும் தாளாக பார்க்காமல் அவர்களுடைய வாழ்க்கையாக பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி தெரிவிப்பார்கள்.

உழவர் சந்தையை பொறுத்தவரை இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகள் முழுமையாக பயன்படும் என்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் தான் இந்த உழவர் சந்தை திட்டம். உழவர் சந்தை திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் இன்னும் வேகமாக உருவெடுத்து செயல்பட வேண்டும். உழவர் சந்தைகளுக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்தி தந்தால் விவசாயிகளும் மக்களும் பெரிதும் பயன்பெறுவார்கள். அதேபோல் கும்மிடிப்பூண்டியிலும் உழவர் சந்தை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்து அங்கு உழவர் சந்தை அமைக்கப்பட வேண்டும். அலுவலர்கள் தங்கள் துறைக்கு தேவையான இடம் தேர்வு செய்ய செல்லும் பொழுது மக்கள் பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உடன் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு கல்விக்கும் மருத்துவத்திற்கும் தான் அதிக முக்கியத்துவம் தந்து திட்டங்களை தீட்டி வருகிறது. அதிலும் குறிப்பாக, பள்ளி கல்விக்கு அதிக நிதி ஒதுக்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள் தான். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உட்பட பல்வேறு முற்போக்கு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இதில் திருவள்ளூர் மாவட்டம் பள்ளிக்கல்வியில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே அரசு திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி மாணவ மாணவியர்களை பள்ளி கல்லூரிக்கு அழைத்து வருவது நம்முடைய பொறுப்பு என்பது உணர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் நல்ல அனுபவம் உள்ளவர்கள் சிறப்பாக செயல்பட கூடியவர்கள் மக்களோடு நேரடி தொடர்பில் இருப்பவர்கள். எனவே அவர்கள் தரும் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் தந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கால நிர்ணயம்!**

பேருந்து நிலையம், சாலைகள் என ஒவ்வொரு அரசு திட்ட பணிகளும் எப்பொழுது முடிக்க முடியும் என்று அந்தந்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் இன்று தெரிவித்துள்ளீர்கள். பணிகளை விரைந்து நிறைவு செய்வது எப்பொழுது என்பது குறித்த காலத்தையும் நீங்களே நிர்ணயித்து உள்ளீர்கள். நீங்கள் இந்த காலகட்டத்திற்குள் முடிப்பதாக சொன்ன நாட்களை நான் குறித்து வைத்துள்ளேன். மாவட்ட ஆட்சியர் அவர்களோடு நீங்கள் ஒன்றிணைந்து இந்த குறிப்பிட்ட நாட்களுக்குள் பணிகளை நிறைவு செய்ய வேண்டும்.

முதலமைச்சர் அவர்களே நேரடியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார். அதில் சிறப்பாக செயல்படும் மாவட்டத்திற்கு பாராட்டுக்களும் தொய்வு ஏற்படும் மாவட்டங்களில் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது உங்களுக்கு நன்றாக தெரியும். ஆதலால் அதனை நன்குணர்ந்து நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இன்றைய ஆய்வின் அறிக்கை முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு மிகச் சிறப்பான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆனால், அந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் எடுத்துச் சென்று இந்த அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து அரசுக்கு நற்பெயர் பெற்று தரும்படி அரசு அலுவலக உங்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாய்வு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், கரிகலவாக்கம் பகுதியில் நேற்று முன்தினம் (31.08.2023) தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் சார்பாக சென்னை எல்லை சாலை திட்டத்தின் கீழ் தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழி சாலை (பிரிவு2) வரை ரூ1,540 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சாலை பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, இச்சாலை பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அரசு செயலாளர் தாரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் , ஆவடி காவல் ஆணையரக ஆணையாளர் கே.சங்கர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன்,திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.கே.ஜெயக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீபாஸ் கல்யாண், முன்னாள் அமைச்சர்/ ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன் (திருவள்ளூர்), ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), எஸ்.சந்திரன் (திருத்தணி), சுதர்சனம் (மாதவரம்), டி.ஜெ. கோவிந்தராஜன் (கும்மிடிப்பூண்டி), க.கணபதி (மதுரவாயல்), துரை சந்திரசேகர் (பொன்னேரி)

மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. ராஜ்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மரு.என்.ஓ. சுகபுத்ரா, ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்பகராஜ், சார் ஆட்சியர் (பொன்னேரி) செல்வி.ஐஸ்வர்யா ராமநாதன், ஆவடி துணை காவல் ஆணையர் திருமதி.ஜெயலட்சுமி, தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக தலைமை பொறியாளர் டி. இளங்கோ, கண்காணிப்பு பொறியாளர் ஜி.தட்சிணாமூர்த்தி, உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை இழிவுபடுத்துவதா?

# ‘தினமலர்’ நாளேட்டுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, செப். 2 -

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

**“மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவர் உயர்ச்சி தாளாண்மை தேனின்**
**கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்.”** என்று பசியின் கொடுமை பற்றி தமிழ் மூதாட்டி அவ்வை சொன்னார்.



பள்ளிக்குப் போகும் குழந்தைகள் காலை உணவு இன்றி பசியோடு சென்றால் உடல் சோர்வும் மனச்சோர்வும் அடைந்து கல்வி கற்பதில் பின்னடைவு ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டுதான் அரசு பள்ளிகளில் படித்து வரும் இலட்சக்கணக்கான ஏழை எளிய குடும்பத்து பிள்ளைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று மதுரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, மேலும் விரிவு படுத்தப்பட்ட காலை உணவு திட்டத்தால் 31 ஆயிரம் அரசு பள்ளிகளில் பயிலும் 18 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

நீதிக் கட்சி காலத்திலேயே சர்.பிட்டி. தியாகராயர் சென்னை மாநகர தந்தையாக இருந்த போது 1928 ஆம் ஆண்டு மதிய உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில் மதிய உணவு திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.

அதன் பிறகு பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியிலும், பின்னர் வந்த எம்.ஜி.ஆர் ஆட்சியிலும் மதிய உணவு திட்டம் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டதால் லட்சக்கணக்கான ஏழை எளிய குழந்தைகள் பசியின்றி பள்ளிக்கு சென்று கல்வி கற்கும் நிலை உருவானது.

சத்துணவில் முட்டை வழங்கும் திட்டத்தை டாக்டர் கலைஞர் செயல்படுத்தினார்.

இந்நிலையில் தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவு திட்டத்தைக் கொண்டு வந்து தமிழ்நாடு கல்வித் துறையில் முன்னேற வழி வகை செய்தார். இலட்சக்கணக்கான குழந்தைகள் பயன்பெறும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தினமலர் நாளேடு இழிவுபடுத்தி செய்தி வெளியிட்டுள்ளது கடும் கண்டனத்திற்குரியது.

சமூக நீதிக்கு எதிரான ஆணவ ஆதிக்க ஆரிய சனாதன மனப்பான்மை தினமலர் நாளேடு வெளியிட்ட செய்தி மூலம் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கிறது. தினமலரின் திமிருக்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

பள்ளிக் குழந்தைகளின் காலை உணவு திட்டத்தை இழிவுபடுத்திய தினமலர் நாளேடு மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக வழக்கறிஞர் ஜி.டி.இராஜேந்திரன் தொகுத்து எழுதிய ‘கலைஞரின் கருத்தோவியங்கள்’ நூல் வெளியீட்டு விழா கே.எம்.தண்டபாணி தலைமையில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. நூலை வெளியிட கோவை கு.இராமகிருட்டிணன் பெற்றுக் கொண்டார். மு.வேலாயுதம் வரவேற்புரையாற்றினார். இதில் கோட்டை அப்பாஸ், பஞ்சம் மணியன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

### வேலூரில் அ.தி.மு.க. ஆட்சியில் பெயர் நீக்கப்பட்டது:

# மாவட்ட அறிவியல் மையத்திற்கு மீண்டும் கலைஞர் பெயர்!

## தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்க அரசாணை!

வேலூர், செப். 2 -

வேலூர் மாவட்ட அறிவியல் மையத்திற்கு மீண்டும் கலைஞர் பெயர் இணைத்து தமிழ்நாடு அரசு உத்தரவு வெளியிட்டுள்ளது.

வேலூரில் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையம் என்ற பெயரில் - இயல் அறிவியல், கண்டுபிடிப்புகள், சுற்றுச் சூழல் மற்றும் தொழில் சார் உள்ளிட்டவைகளின் காட்சிக்கூடம் கொண்ட அறிவியல் மையம் 2011 ஜனவரி 25 முதல் செயல்பட்டு வருகிறது. அப்போதைய துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் இந்த அறிவியல் மையம் திறந்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அந்த மாவட்ட அறிவியல் மையத்திற்கு சூட்டப்பட்ட ‘டாக்டர் கலைஞர் கருணாநிதி’ என்ற பெயரை நீக்கி விட்டது. கடந்த 10 ஆண்டுகளாக பெயர் இல்லாமல் மாவட்ட அறிவியல் மையம் என்றே இருந்து வந்தது.

இதற்கிடையே வேலூர் தொகுதி சட்டமன்ற கழக உறுப்பினர் ப.கார்த்தி கேயன், மீண்டும் அந்த மாவட்ட அறிவியல் மையத்துக்கு டாக்டர் கலைஞர் கருணாநிதி என்று முன் இருந்ததுபோல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கடிதம் எழுதியும் நேரில் வற்புறுத்தியும் இருந்தார்.

இதையடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றார். தமிழ்நாடு அரசு இதை ஆய்வு செய்து, இனி வேலூரில் உள்ள மாவட்ட அறிவியல் மையத்திற்கு, ‘டாக்டர் கலைஞர் கருணாநிதி’ என்று பெயரை மீண்டும் சேர்த்து தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மீண்டும் கலைஞர் பெயர் அந்த மாவட்ட அறிவியல் மையத்திற்கு அதிகாரப்பூர்வமாக சூட்டப்பட்டதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# ‘மாபெரும் தமிழ்க் கனவு’ இரண்டாம் கட்ட நிகழ்வுகள் ஆரம்பம்!

சென்னை, செப். 2 -

கல்லூரி மாணவர்களிடையே தமிழர்களின் மரபையும் தமிழ்ப் பெருமிதத்தையும் உணர்த்தும் வகையில் ‘மாபெரும் தமிழ்க் கனவு’ என்ற பெயரிலான பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வுகள் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளான 03.02.2023 அன்று தொடங்கப்பட்டு 24.04.2023 வரை, தமிழ்நாடு முழுவதும் உள்ள 1,000 கல்லூரிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 1 லட்சம் மாணவர்களைச் சென்றடையும் வண்ணம் 100 இடங்களில் சிறப்பாக நடத்தப்பட்டன. உயர்கல்வித் துறையுடன் தமிழ் இணையக் கல்விக்கழகம் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்தியது.

இதன் 100வது நிகழ்ச்சி சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 24.04.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் இந்நிகழ்வானது கல்லூரி மாணவர்களிடையே சமூக விழிப்புணர்வு, சமத்துவ வளர்ச்சி குறித்த புரிதலை ஏற்படுத்தும் வகையிலும், அவர்கள் அடுத்த கட்ட இலக்குகளை நோக்கிச் செல்லும் வகையிலும் அமைந்திருக்கிறது. எனவே கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் பயனடையும் வண்ணம் இந்நிகழ்ச்சி அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து நடத்தப்படும் என அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 200 கல்லூரிகளில் ‘மாபெரும் தமிழ்க் கனவு’ பரப்புரைத் திட்டம் நிகழ்த்தத் திட்டமிடப்பட்டு வருகின்றன. குறைந்தபட்சம் 1.5 லட்சம் மாணவர்களைச் சென்றடைவதே திட்டத்தின் இலக்காகும். பல்வேறு தளங்களில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டின் 50க்கும் மேற்பட்ட ஆளுமைகளைக் கொண்டு, 200 சொற்பொழிவுகளை நடத்தி முடிக்க செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு உதவும் வகையில் புத்தகக் காட்சி, ‘நான் முதல்வன்’, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மாவட்டத் தொழில் மையம், தாட்கோ, வங்கிக் கடனுதவி ஆலோசனை, சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புகள் போன்ற அரங்குகள் நிகழ்வு நடைபெறும் கல்லூரிகளில் அமைக்கப்படுகின்றன.

இந்நிகழ்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு ‘உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு வழிகாட்டி’, ’தமிழ்ப் பெருமிதம்’ ஆகிய இரு கையேடுகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பரப்புரையின் தொடர்ச்சியாக சென்னை, செயின்ட் ஆனிஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கலையரங்கில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியில் ‘துணிந்து செல்’ என்னும் பொருண்மையில் பேராசிரியர் திருமிகு. பர்வீன் சுல்தானா அவர்கள் கருத்துகளை எடுத்துரைத்தார். தமிழ் இணையக் கல்விக்கழக இணை இயக்குநர் திரு. ரெ.கோமகன் அவர்கள் திட்டத்தின் நோக்கத்தை விளக்கினார்.

செயின்ட் ஆனிஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் இ. அன்னம்மாள் அற்புத மேரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மேற்கண்ட நிகழ்வில் ஏறத்தாழ 600 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். ‘தமிழ்ப் பெருமிதம்’ சிற்றேட்டிலுள்ள துணுக்குகளை வாசித்துச் சிறப்பாக விளக்கம் அளித்த மாணவர்களைப் பாரட்டி பெருமிதச் செல்வி / பெருமிதச் செல்வன் எனப் பட்டம் சூட்டிச் சான்றிதழும் பரிசும் நிகழ்வின் இறுதியில் வழங்கப்பட்டன.

சொற்பொழிவாளர்களிடம் தரமான கேள்விகளை எழுப்பிய மாணவர்களைப் பாராட்டி கேள்வியின் நாயகி / கேள்வியின் நாயகன் எனப் பட்டம் சூட்டிச் சான்றிதழும் பரிசும் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொடர் நிகழ்ச்சிகள் தமிழ்நாடு அரசால் நடத்தப்பெறவுள்ளன.


யாதவர் எழுச்சி மாநாடு
தமிழ்நாடு யாதவ மகா சபை
நாள் - 02-09-2023 பிற்பகல் 3.00 மணி
இடம் - வீரன் அழகு முத்துகோன்திடல் சிறுகனூர், திருச்சி
தலைமை டாக்டர் நாசே J.ராமச்சந்திரன்
தலைவர்- தமிழ்நாடு யாதவ மகாசபை
மாநாட்டை குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைப்பவர்
மாண்புமிகு K.N.நேரு MLA
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர்
சிறப்பு விருந்தினர்
மாண்புமிகு K.R.பெரியகருப்பன் MLA
மாநில கூட்டுறவு துறை அமைச்சர் தமிழ்நாடு அரசு
மாண்புமிகு இராஜகண்ணப்பன் MLA
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு T.K.G.நீலமேகம் MLA
திரு மீ.ஆ.வைத்தியலிங்கம் Ex.MLA
திரு M.மகேஷ்குமார்
துணை மேயர் சென்னை பெருநகர மாநகராட்சி
திரு R.சிவா
சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் புதுச்சேரி மாநிலம்
திரு K.R.ராஜீ
துணை மேயர் திருநெல்வேலி மாநகராட்சி
திரு வேலுமனோகரன்
பொதுச்செயலாளர் தமிழ்நாடு யாதவ மகாசபை
முனைவர் A.M.செல்வராஜ்
மூத்த துணை தலைவர் தமிழ்நாடு யாதவ மகாசபை
திரு MMDA K.கோபி
யாதவர் எழுச்சி மாநாட்டிற்கு வருக! வருக!! என வரவேற்கும்
இவண்
K.எத்திராஜ்
பொருளாளர் - தமிழ்நாடு யாதவ மகா சபை
தி.மு.க பொதுக்குழு உறுப்பினர்


DMK
LEGAL WING
கலைஞர் 100
1924 - 2023
தி.மு.க சட்டத்துறை சார்பில்
புதியதாக நியமிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகளின்
கலந்தாலோசனை கூட்டம்
தலைமை
திரு என்.ஆர் இளங்கோ எம்.பி
செயலாளர் திமுக சட்டத்துறை
முன்னிலை
திரு இரா.விடுதலை
தலைவர் தி.மு.க சட்டத்துறை
வரவேற்புரை
திரு என்.மணிராஜ்
இணைச் செயலாளர் தி.மு.க சட்டத்துறை
சட்டத்துறை இணைச் செயலாளர்கள்
இ.பரந்தாமன் MLA கே.எஸ்.இரவிச்சந்திரன் Ex MLA
இரா.தாமரைசெல்வன் Ex MP கே.எம்.தண்டபாணி
பி.ஆர்.அருள்மொழி
சட்டத்துறை துணைச் செயலாளர்கள்
ஜெ.பச்சையப்பன் கே.சந்துரு பட்டி ஜெகன்நாதன்
ப.வைத்தியலிங்கம் எஸ்.தினேஷ்
தலைமைக் கழக வழக்கறிஞர்கள்
சூர்யா வெற்றிகொண்டான்
வீ.கவிகணேசன் கே.மறைமலை
சிறப்பு அழைப்பாளர்கள்
மாண்புமிகு
கே.என்.நேரு
நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
மாண்புமிகு
எஸ்.ரகுபதி
சட்டத்துறை அமைச்சர்
மாண்புமிகு
பி.கே.சேகர்பாபு
இந்து சமய அறநிலையத்துறை (ம)
சென்னை பெருநகர வளர்ச்சி ஆணைய அமைச்சர்
திரு. ஆ.இராசா எம்.பி
கழக துணை பொதுச் செயலாளர்
திரு. ஆர்.எஸ்.பாரதி
கழக அமைப்புச் செயலாளர் திமுக
திரு. தயாநிதி மாறன் எம்.பி
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்
நன்றியுரை
சு.ராதாகிருஷ்ணன்
தி.மு.க சட்டத்துறை இணைச்செயலாளர்
நாள் : 02.09.2023 சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : ஃபைஸ் மஹால்
(இம்பிரியல்,ஆல்பர்ட் தியேட்டர் அருகில்)
வேனல்ஸ் ரோடு எழும்பூர் – 600 008.



திருப்பூர் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார், திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பொன்னாடை அணிவித்து கௌரவித்து பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினர். இதில் திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், மாநகராட்சி துணை மேயர் பாலசுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் அ.சுல்தானா பர்வீன், உதவி ஆணையாளர் வினோத், தலைமை பொறியாளர் (பொ) செல்வநாயகம், செயற்பொறியாளர் வாசுகுமார், மாவட்ட முன்னாள் பொருளாளர் ரத்தினசாமி, கருவம்பாளையம் பகுதி கழக செயலாளர் மியாமி ஆ.அய்யப்பன், கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன், பொதுசுகாதாரக்குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்பட பலர் உள்ளனர்.

### கொடைக்கானலில் அமைச்சர் பொன் முடி

# கல்லூரி மாணவிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார்!

திண்டுக்கல்,செப்.2-

கொடைக்கானல் அரசு மகளிர் கல்லூரியில், மாணவிகளிடம் அமைச்சர் பொன்முடி குறைகளை கேட்டறிந்தார்.

குறைகளை கேட்ட அமைச்சர் கொடைக்கானல் தாலுகா வில்பட்டி ஊராட்சி அட்டுவம்பட்டி பகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரியில் படிக்கிற மாணவிகளுடனான கலந்துரையாடல் கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி. செயலாளர் கார்த்திக் ஆகியோர் மாணவிகள். பேராசிரியர்களுடன் கலந்துரையாடினார். அப்போது மாணவிகளிடம் அமைச்சர் பொன்முடி,குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாணவிகள் இங்கு படித்து வருகின்றனர். எனவே கூடுதல் கட்டிடங்கள், விடுதிகள் போக்குவரத்து வசதி, கழிப்பறை வசதி, விளையாட்டு மைதானம், கலையரங்கம் படிப்பை, ஆகியவை கட்டித்தர வேண்டும் என்று மாணவிகள் கோரிக்கை விடுத்தனர்.

வேறுமொழி படிக்க தடை இல்லை தற்போது உள்ள பாடத்திட்டங்கள் மாற்றக்கூடாது என்றும், தமிழகத்திலேயே இந்த கல்லூரியில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வரும் பொதுப் பணியியல் துறை பாடத்திட்டத்தை விரிவுப்படுத்த வேண்டும்.கவுரவ விரிவுரையாளர்களுக்கு அரசு உதவிகளை வழங்க வேண்டும் என்றும் மாணவிகள் வலியுறுத்தினர். இதற்கு பதில் அளித்த அமைச்சர் பொன்முடி பேசும்போது கூறியதாவது:

தமிழ்நாடு கல்வி கொள்கைக்காக தனியாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கை அமலில் உள்ள வேளையில், வேறு மொழிகளை படிப்பதில் தவறு இல்லை. ஆனால். அதை கட்டாயப்படுத்த கூடாது. 3 ஆண்டுகள் படிக்கக்கூடிய இளங்கலை படிப்பை நான்கு ஆண்டுகளாக மாற்ற முயற்சி நடந்து வருகிறது அதனை தடுத்துள்ளோம்.

தமிழ்நாடு கல்விக் கொள்கை குறித்து முதல் அமைச்சர் விரைவில் அறிவிப்பு வெளியிடுவார். இதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும், இருப்பினும் மாணவிகள், எதிர்காலத்தில் வேலை கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். தமிழகம் முழுவதும் ஒரே மாதிரி பாடத்திட்டங்கள் கொண்டுவரப்படும். கொடைக்கானலில், மாணவர்களுக்கு தனி கல்லூரி கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து கலந்து ஆலோசிக்கப்படும். அடுத்த கல்வியாண்டுக்குள் புதிதாக ஆண்கள் கல்லூரி கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். கல்வி,விளையாட்டு உயர் கல்வித்திட்டத்தின் சார்பில் விடுதிகள் கட்டித்தரப்படும் கல்வியுடன் விளையாட்டு போட்டித்தேர்வுகளிலும் மாணவிகள் பங்கேற்க வேண்டும். நான் முதல்வன் திட்டத்தின் மூலம் மாணவ மாணவிகள் பயனடைய வேண்டும். மாணவிகள் நன்றாக படிக்க வேண்டும்.

பொதுப்பணியியல் துறை இந்த கல்லூரியில் மட்டும் செயல்பட்டு வருவது மிகுந்த மகிழ்ச்சி. அந்த மாணவிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் இவ்வாறு அமைச்சர் பொன் முடி பேசினார்.

கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்டசெயலாளர் இ. பெ.செந்தில்குமார் எம். எல்.ஏ. நகராட்சி தலைவர்செல்லத்துரை, துணைத் தலைவர் மாயக்கண்ணன், நகர செயலாளர் முகமது இப்ராஹிம், கிழக்கு மாவட்ட இளைஞரணி வேட்பாளர் கணேசன், ஒன்றியக்குழு தலைவர்சுவேதாராணிகணேசன், வில்பட்டி ஊராட்சி தலைவர் பாக்கியலட்சுமி ராமச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# "கலைஞரின் கருத்தோவியங்கள்" நூல்வெளியீட்டுவிழா!

### அந்தியூர் செல்வராஜ் எம்.பி. வெளியிட்டார்!

கோவை, செப். 2-

கோவையில் கடந்த 29.8.2023 மாலை 6 மணிக்கு கோவை ராஜவீதி விஜயா பதிப்பகத்தில் கழக வழக்கறிஞர் ஜி.டி. இராஜேந்திரன் தொகுத்தெழுதிய "கலைஞரின் கருத்தோவியங்கள்" என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இவ் இனிய நிகழ்வில் தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., முதல் நூலை வெளியிட்டார். தந்தை பெரியார் திராவிட கழக பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் முதல் நூலைப் பெற்றுக்கொண்டார்.

நூல் வெளியீட்டு விழா தலைமையினை தலைமைக் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எம். தண்டபாணி Ex.M.L.C., தலைமை தாங்கினார். கோவை விஜயா பதிப்பக உரிமையாளர் மு.வேலாயுதம் வரவேற்புரையாற்றினார். விழாவில் கோவை மாநகர மாவட்ட தி.மு.கழக துணை ச்செயலாளர் கோட்டை அப்பாஸ், நாடக திறனாய்வாளர் பஞ்சம் மணியன், பகுதி செயலாளர்கள் வ.மா.சண்முக சுந்தரம், எஸ்.எம்.சாமி மாமன்ற உறுப்பினர்கள் கார்த்திக் செல்வராஜ், மார்க்கெட் மனோகரன், திராவிட தமிழர் கட்சி பொதுச் செயலாளர் வழக்கறிஞர் வெண்மணி, கோவை மாநகர மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்பு செழியன், துணை அமைப்பாளர் ஆர்.விஜயராகவன் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவில் கழக மூத்த வழக்கறிஞர் எஸ்.சந்திர மோகன் தலைமைக் கழக செயற் குழு உறுப்பினர் தணிக்கை இராஜேந்திரன், தலைமைக் கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறு ச்சாமி, மாவட்டக் கழக அலுவலக பொறுப்பாளர் கு.பாலன், டாக்டர் எம்.சீனிவாசன், வழக்கறிஞர் தென்னை சிவா, ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர்கள் சந்திரசேகர், கல்லுக்குளி ரவி, சின்னச்சாமி, மாநகராட்சி வழக்கறிஞர் இராஜமாணிக்கம், முரளி பொன்ராஜ், மு.கோபால் எஸ்.லட்சுமணன், பூங்குயில் சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்,

"ஆட்சியிலும், கட்சியிலும் எந்த பதவியும் இல்லாமலும், எதையும் எதிர்பார்க்காமல் கழகத்திற்காக களப்பணியாற்றும் அடிமட்டத் தொண்டனான அருந்ததியர் சமுதாயத்தின் முதல் வழக்கறிஞரான ஜி.டி. இராஜேந்திரன் தொகுத்தெழுதி வெளிவரும் கலைஞரின் கருத்தோவியங்கள் நூல் வெளியீட்டு விழாவில் அவசியம் தாங்கள் கலந்து கொள்ள வேண்டும்" என்று கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப. செல்வராஜ், எம்.பி., அவர்களுக்கு, கழகத் தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்கள், பணித்திருந்தார்கள் என்கின்ற செய்தியினை விழாவில் அண்ணன், அந்தியூரார் குறிப்பிட்ட பொழுது மிகுந்த வரவேற்பையும் மகிழ்ச்சியையும் கைத்தட்டல் மூலமாக பார்வையாளர்கள் வெளிப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவினை கவிஞர் அவை நாயகன் தொகுத்து வழங்கினார்கள்.

விழாவின் முடிவில் நூலாசிரியர் வழக்கறிஞர் ஜி.டி. இராஜேந்திரன்அனைவருக்கும் நன்றி கூறினார்.



ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நேற்று முன்தினம் (31.8.2023) கோவை மாவட்டம், நிர்மலா கல்லூரி வளாகத்திற்கு எதிரில் உள்ள ஆதிதிராவிடர் மாணவியர்கள் விடுதியில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மோ.ஷர்மிளா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சுரேஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் உள்ளனர்.



நீட் எதிர்ப்புப் போராளி மாணவி அனிதாவின் நினைவு நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் அவரது படத்திற்கு மாலை அணிவித்து மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெயேந்திரன், நகர செயலாளர் நவாப் அஞ்சலி செலுத்தினர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 60 பள்ளி மாணவர்களுடன் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் அமைந்துள்ள 216 அடி உயரம் கொண்ட ராமானுஜர் "சமத்துவச் சிலையை" பார்வையிட்டு அதன் சிறப்பம்சங்களை பள்ளி மாணவர்களிடம் எடுத்துரைத்தார்.

### 5 திருக்கோயில்களுக்குச் சொந்தமான

# ரூ.25 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

## இந்து சமய அறநிலையத்துறை அதிரடி நடவடிக்கை!

சென்னை, செப். 2-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ளததிருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த 5 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.25 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், குலவிளக்கு அருள்மிகு கோபாலபெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான 4 ஏக்கர் 67 சென்ட் நிலங்கள் மற்றும் அருள்மிகு பொன்மலை குமாரசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 22 ஏக்கர் 91 சென்ட் நிலங்கள் 31 நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இதனை அகற்ற ஈரோடு மண்டல இணை ஆணையர் நீதிமன்ற உத்தவின்படி சட்டப்பிரிவு 78ன் கீழ் உதவி ஆணையர் அன்னக்கொடி முன்னிலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.15 கோடியாகும்.

மேலும், திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், அய்யம்பாளையம், அருள்மிகு ஏரிகருப்பண்ணசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 23 வீடுகள் உள்ள 6 ஏக்கர் புன்செய் நிலம், உத்தமபாளையம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயி லுக்குச் சொந்தமான ஒரு வீட்டுடன் கூடிய 30 சென்ட் நிலம் மற்றும் லக்கமநாயக்கன்பட்டி, அருள்மிகு அழகேஸ்வரசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 14 ஏக்கர் புன்செய் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. திருப்பூர் மண்டல இணை ஆணையர் அவர்களின் உத்தரவின்படி உதவி ஆணையர் சி. கருணாநிதி முன்னிலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.10 கோடியாகும்.

ஆகமொத்தம் ஒரேநாளில் மீட்கப்பட்ட 5 திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்பு ரூ.25 கோடியாகும்.

இந்நிகழ்வுகளின்போது வருவாய் மற்றும் காவல் துறை அலுவலர்கள், திருக்கோயில் செயல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

### அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாபெரும் உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் சா. சி. சிவசங்கர்- சுபா.சந்திரசேகர் க.சொ.க. கண்ணன்- கு.சின்னப்பா பங்கேற்பு!

அரியலூர்,செப்.2-

அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஆகஸ்டு 28 ஆம் தேதி வருகை தந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட எல்லையில் உற்சாக வரவேற்பு அரியலூர் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் சிறப்பாக அளிக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து அரியலூர் ரவுண்டானா பகுதியில் ஏராளமான பெண்கள், பொதுமக்கள், கழகத் தோழர்கள் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா. சி. சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சொ.க. கண்ணன்,

கு.சின்னப்பா, கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் பெருநற்கிள்ளி, மாவட்ட அவைத் தலைவர் சிவ. மாணிக்கம் மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் மு. கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு,

ஒன்றியக் கழக செயலாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா. மணிமாறன், வா. செளந்தரராஜன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ. கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் அன்பழகன் இரா.பாலு, பொய்யாமொழி, ஷாஜகான், சுமதி கருணாநிதி,

நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், துணைத் தலைவர் த.கலியமூர்த்தி, உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.எம்.முருகேசன், வீர. சிவா, வசந்த பகலவன், தமிழ்மாறன், தர்மராஜ்,குணசீலன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் பானுமதி ராஜேந்திரன், மீனா சாமிநாதன், மகளிர் அணியினர் காந்திமதி, ராணி, இலக்கியா, சித்ரா, சுகன்யா, சரிதா,

நகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் கரிகாலன் அரியலூர் நகரக் கழக நிர்வாகிகள் ராஜேந்திரன், மாலா தமிழரசன், குணா, மணிவண்ணன், உத்திராபதி, கொளஞ்சியப்பா, தலைமை கழக பேச்சாளர் கவிஞர் வீரமுரசு, அணி பொறுப்பாளர்கள் ஜெயகுமார்,இளம்பரிதி, கதிர்,முத்தமிழ், கழக வழக்கறிஞர்கள் சின்னதம்பி, ஆ. கதிரவன், முத்தமிழ் செல்வன், இராஜா, பாலா, கதிரவன்,மகேந்திரன், சசிகுமார், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர், மகளிர் அணி உறுப்பினர்கள்,பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### நீட் எதிர்ப்புப் போராளி

# அரியலூர் அனிதா படத்திற்கு மாலை!

## கழக முன்னணியினர் பங்கேற்பு

திருச்சி, செப். 2-

திருச்சியில் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட முசிறியில் வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் ஆலோசனைப்படி நேற்று (செப்டம்பர் 1) வெள்ளிக்கிழமை நீட் தேர்வு எதிர்ப்பு போராளி, அரியலூர் அனிதா அவர்களின் நினைவுநாள் நிகழ்வை முன்னிட்டு முசிறி கைக்காட்டியில் அவரது திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது..

இந்நிகழ்வில் முசிறி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ராமச்சந்திரன் முசிறி நகர செயலாளர் சிவக்குமார் , அகத்தீஸ்வரன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், மாணவரணி நிர்வாகிகள், மற்றும்கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.

### மும்பை ம.சேசுராசுவின்

# சகோதரியின் கணவர் மார்டின் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

மும்பை, செப். 2-



மும்பை திமுக முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் ம.சேசுராசு அவர்களின் சகோதரி எம். பனிமயத்தின் கணவரும் காரைக்குடி நகர 11-வது வார்டு திமுக முன்னாள் பிரதிநிதி அ.மார்டின் வயது 59 அவர்கள் 30.08.2023 பிற்பகல் 3 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரது நல்லடக்கம் இன்று (1.9.2023 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு வ.உ.சி ரோட்டில் உள்ள சிட்டி வியூ அப்பார்ட்மெண்டில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கழனி வாசல் ஆவின் பால் பண்ணை அருகில் உள்ள கிறுத்துவ கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

செய்தியறிந்ததும் கழகத்தினர் திரளாகச் சென்று மறைந்த மார்டின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கும் உற்றார் உறவினர்களுக்கும் மும்பை நகரத் தி.மு.க. மற்றும் பாந்திரா திமுக சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

# செப்.18ந்தேதி விநாயகர் சதுர்த்தி விடுமுறை!

## அரசாணை வெளியீடு!

சென்னை,செப்.2-

விநாயகர் சதுர்த்தி இந்த ஆண்டு செப்டம்பர் 18ந் தேதி கொண்டாடப்படுகிறது.

செப்.17ந்தேதி அறிவிக்கப்பட்ட விடுமுறை ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.விநாயகர் சதுர்த்தி செப்டம்பர் 18ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. ஆனால் அதற்கு ஒருநாளுக்கு முன்பாக அரசு விடுமுறை அறிவித்துள்ளது.விநாயகர் சதுர்த்தி இந்த ஆண்டு செப்டம்பர் 18ந் தேதி தான் கொண்டாடப்படுகிறது.

பொதுவாக அமாவாசையில் இருந்து நான்காவது நாளே சதுர்த்தி வரும். அதன் அடிப்படையில் ஆவணி மாத அமாவாசையில் இருந்து 4ம் நாளான செப்டம்பர் 18ந் தேதியே விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படும். இந்த விஷயத்தில் குழப்பம் தேவையில்லை என்று ஆற்காடு கா. வெ.சீத்தா ராமைய்யர் சுத்த வாக்கிய சர்வமுகூர்த்த பஞ்சாங்க கணிதர் சுந்தர ராஜன் அய்யர் கூறி இருந்தார்.

இந்நிலையில் தமிழ் நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் விநாயகர் சதுர்த்தி அரசு விடுமுறை செப்.18 ந்தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.



வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பாக, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA), மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டம் (SSERERS) 20232024, B3 செயல் விளக்கத்தின்கீழ், வேளாண் இடுபொருட்கள் மற்றும் கருவிகளை, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், 2 பயனாளிகளுக்கு கை தெளிப்பான்களையும், 5 பயனாளிகளுக்கு தார்பாய்களையும், 2 பயனாளிகளுக்கு குடற்புழு நீக்கம் கிட்களையும், 1 பயனாளிக்கு பருத்தி கிட்டையும் விவசாயிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரும், மத்திய ஒன்றிய திமுக செயலாளருமான தி.கணேசன், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஜெ.சுதாகர், மாவட்ட திமுக பிரதிநிதி டி.என்.கரிகாலன், கும்பகோணம் அட்மா குழு தலைவர் ஆலமன்குறிச்சி ஆர்.குமார், வேளாண்மை அலுவலர் அசோக்குமார், துணை வேளாண்மை அலுவலர் சாரதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரகாஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் தனசேகரன், இளமதி மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியம், கடையம் ஊராட்சியில் அங்கன்வாடி மையத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, ஒன்றியக் குழு தலைவர் கலைச்செல்வி, ஒன்றியச் செயலாளர்கள், மாவட்டக் கவுன்சிலர் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், அரசு வழக்கறிஞர் பொன் கோபு, மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன், ஊராட்சி மன்ற தலைவர் நித்யா கதிரவன் மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளை செயலாளர்கள் ராஜேந்திரன், ஏழுமலை, செல்வம், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

இந்தியா கூட்டணியில்

## பா.ஜ.க. கூட்டணி கட்சிகளும் சேரும்!

### பீகார் முதல்வர் நிதிஷ் குமார் கருத்து!

பாட்னா, செப்.2-

இந்தியா கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய இருப்பதாக பீகார் முதல்வர் நிதிஷ் குமார் சமீபத்தில் கூறியிருந்தார்.

இந்நிலையில், காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் அலோக் சர்மா அளித்த பேட்டியில், "பாஜ தனது தேசிய ஜனநாயக கூட்டணியில் 38 கட்சிகள் இருப்பதாக கூறி வருகிறது. அதில் உள்ள சுமார் 5 கட்சிகள் இந்தியா கூட்டணியில் இணைய பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றன. இன்னும் பல கட்சிகள் இந்தியா கூட்டணிக்கு வர உள்ளன. புதிதாக இணையும் கட்சிகள் குறித்து அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படும்" என்றார்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக மாணவர்களுக்கு உரிமையான பட்டங்கள் வழங்கப்படவில்லையாமே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; உண்மைதான். படித்து முடித்துப் பட்டம் பெற முடியாமல், 5 லட்சம் மாணவர்கள் காத்திருக்கிறார்களாம். பட்டம் என்பது, படித்து முடித்து தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவ - மாணவியரின் தகுதி உரிமைச் சான்றாவணம் ஆகும்.**

**அந்த ஆவணம் கையில் இல்லாமல், வேலை வாய்ப்புக்கு முயற்சி செய்ய முடியாது. வேலை இல்லாத மாணவர்களின் மனதில் விபரீத எண்ணங்கள் உருண்டு உபத்திரவப்படுத்தும் என்பதை ஊரே அறியும். ஆளுநர் அறியாதிருப்பது ஆச்சரியமே!**

**பட்டமளிப்பு விழா நடத்திட அனுமதி அளிக்காமல், ஒரு தலைமுறையின் முன்னேற்றத்தை ஒத்திவைக்கிறோமே என்ற உறுத்தல் இல்லாமல்; உதகைக்கும், கொடைக்கானலுக்கும் உல்லாசப் பயணம் போகிறார் ஆளுநர்.**

**மலினமான விளம்பர நோக்கில், சர்ச்சைக் குப்பைகளைக் கிளறுவதிலும், செய்ய வேண்டியதைத் தவிர்த்து, செய்யக் கூடாததைச் செய்வதிலும்தான் ஆளுநர் முழு நேரத்தையும் செலவிடுகிறார். அதனால் மாணவர்கள் பட்டம் பறக்க விட்டு, போராட்டம் நடத்தி, உள்ளப் புழுக்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் !**

பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம்:

# அசிங்கத்தைத் தொட்டு எழுதும் 'தினமனு'!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கடும் கண்டனம்!

சென்னை, செப்.2-

சூத்திரர்கள் கல்வி வளர்ச்சியின் மீதுள்ள பார்ப்பனக் காட்டமே தினமலரின் தலைப்புச் செய்தி என்று அறிக்கை விடுத்துள்ளார் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

அவரது அறிக்கை வருமாறு:

"காலை உணவுத் திட்டம் : மாணவர்களுக்கு டபுள் சாப்பாடு: ஸ்கூல் கக்கூஸ் நிரம்பி வழிகிறது"

பார்ப்பன நஞ்சு கக்கும் ஏடான 'தினமலர்' என்னும் பத்திரிகையின் சேலம் பதிப்பில் முதல் பக்கத்தில் இப்படி ஒரு தலைப்புச் செய்தி!

ஆம், உண்மை தான் ஒரு 'வெகுஜனப் பத்திரிகை' யின் தலைப்புச் செய்தி தான்! 'உண்மையின் உரைகல்' எங்கே போய் உரைத்துப் பார்த்திருக்கிறது பாருங்கள்!

அரசுப் பள்ளியில் பயிலும் எளிய பிள்ளைகள் காலை உணவின்றி காய்ந்த வயிற்றுடன் பள்ளிக்குப் படிக்க வருகிறார்களே என்பதற்காகத் தமிழ்நாட்டை ஆளும் 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான 'திராவிட மாடல்' திமுக அரசு, "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" என்ற திட்டத்தைத் தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை யிலும், மேலும் ஒரு சில நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளிலும் கடந்த ஆண்டு 2022 செப்டம்பர் 15 அன்று தொடங்கி



14,000 மாணவர்களுக்கு உணவு அளித்துவந்தது.

அதனை தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தி, 17 லட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் ஆகஸ்ட் 25, 2023 அன்று திருக்குவளையில் தொடங்கி வைத்தார் முதலமைச்சர்.

திட்டம் தொடங்கப்பட்டது முதலே பார்ப்பனர்கள் பலரின் புலம்பல்களை நாளும் கேட்க முடிகிறது. காலம் காலமாகப் படிக்கக் கூடாது என்று தடுத்து வைக்கப் பட்டிருந்த பள்ளிக் குழந்தைகள் படிக்கிறார்கள், அவர் களுக்கு அரசு அனைத்து வகையான வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுக்கிறது. மதிய உணவுடன் காலை உணவையும் வழங்குகிறது பசிப்பிணி போக்குகிறது என்றதும் பொறுக்கமுடிய வில்லை அவர்களால்!

அன்னதானத்தை விட உயர்வானதில்லை என்று அளந்துகொட்டும் இவர்கள் தான், பச்சைக் குழந்தைகள் சாப்பிடும் உணவைக் கண்டு பொறுக்காமல், அதன் மூலம் 'அனைவருக்கும் அனைத்தும்' என்னும் வகையில் சூத்திரர்களின் கல்வி வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பதையும் கண்டு கோபப்பட்டுத்தான், இப்படி ஓர் அருவெறுப்பான செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

இத்தகைய வன்ம புத்தியும், கொடூர மனமும் அத் தனை எளிதில் மனிதர்களுக்கு வாய்க்காது. ஏனெனில், அன்னதானம், பூதானம், சொர்ணதானம் என எல்லாமே பார்ப்பனர்களுக்கு வழங்கப்படலாமே தவிர, பார்ப்பனரல்லாத சூத்திரர்களுக்கு வழங்கப்படலாமா? எதுவாக இருந்தாலும் அறுத்துக் கொட்டுவதென்றால் அக்கிரகாரத்துக்கு மட்டுமல்லவா செய்யப்பட வேண் டும்! அதை மீறி, ஏழை, எளிய பார்ப்பனரல்லாதாருக்கு, பசித்தோருக்கு வழங்கப்படலாமா?

இந்துச் சட்டத்தின் படி, பல தீர்ப்புகளில் கூட 'தர்மம்' என்பதற்கு 'Feeding Brahmins' என்பதுதானே பொருள் சொல்லப்பட்டு தீர்ப்பளிக்கப் பட்டது. பசித்தவர் அனைவருக்கும் உணவு தருவதல்ல பார்ப்பனருக்குத் தருவதே 'தர்மம்' என்றல்லவா சொல்லிக் கொண்டிருந்தார்கள்?

### அனைவருக்கும் அல்லவா அரசு உணவளிக்கிறது!

உண்மையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற பாகுபாட்டை இந்த அரசு காட்டவில்லையே! அனைவருக்கும் அல்லவா உணவளிக்கிறது! இவர்கள் எப்போதும் சொல்லும் 'அரிய வகை ஏழைப் பார்ப்பனர்களுக்கும்' அல்லவா இத் திட்டம் பொருந்தும்? ஆனால், அவாள் வீட்டுப் பிள்ளைகள் இங்கே வந்து உண்பதில்லையா? யார் வீட்டுக் குழந்தைகளாக இருந்தாலும் இப்படி ஓர் இழிவான எண்ணம் தோன்றுமா நம் மனதில்!

பார்ப்பனர்களுக்கென்றால் மட்டும் "பத்திரிகா தர்மம்", "கருத்துச் சுதந்திரம்" என்றெல்லாம் கச்சை கட்டி வருவார்களே, அவர்கள் இதற்கும் முன்வரிசையில் வந்து பதில் சொல்வார்களா?

நாமெல்லாம் எழுதுவதற்கான பேனாவில் மையைத் தொட்டுத் தான், மையை இட்டுத் தான் எழுதுகிறோம். ஆனால் இவர்களோ, அசிங்கத்தைத் தொட்டு அல்லவா தலைப்புச் செய்தியைத் தீட்டி மகிழ்கிறார்கள்.

இவர்களையெல்லாம் என்னவென்று அழைப்பது?

"மலமள்ளுவது 'புனித' மான பணி, அதைச் செய்பவர்கள் 'யோக நிலை' அடைவார்கள்" என்று தனது 'கர்ம யோக்' நூலில் எழுதினாரே பிரதமர் நரேந்திர மோடி. இப்போது கழிவறை நிரம்பி வழிவதாகக் கவலைப்படுவோர் யோக நிலை தரும் அந்தச் சேவையை இப்போதாவது செய்வார்களா? இந்த வெறுப்புணர்வாளர்களைத் தன் டுவிட்டர் பதிலடியில் மிகச் சரியாக 'தினமனு' என்று அடை யாளப்படுத்தியிருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர், திமுக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

"உழைக்க ஓர் இனம் உண்டு கொழுக்க ஓர் இனம் என மனுவாதிகள் கோலோச்சிய காலத்தில் 'எல்லார்க்கும் எல்லாம்' எனச் #சமூகநீதி காக்க உருவானதுதான் திராவிடப் பேரியக்கம்.

'சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியை மட்டும் கொடுத்து விடாதே' என்பதை நொறுக்கி, கல்விப்புரட்சியை உருவாக்கிய ஆட்சி திராவிட இயக்க ஆட்சி.

நிலவுக்குச் சந்திரயான் விடும் இந்தக் காலத் திலேயே சனாதனம் இப்படியொரு தலைப்புச் செய்தியைப் போடுமானால், நூறு ஆண்டுகளுக்கு முன் என்ன ஆட்டம் ஆடியிருக்கும்? எளியோர் நிலை எப்படி இருந்திருக்கும்? இன்னமும் அந்த வன்மம் மறையவேயில்லை!

'தினமனு'வுக்கு எனது வன்மையான கண்டனங்கள்!"

எவ்வளவு ஆழமான, வரலாற்றை நினைவு கூரும் பதிவு!

நடப்பது திராவிட ஆரிய பரம்பரை யுத்தம் தானே! அம்மையார் ஜெயலலிதாவே வெளிப்படையாகத் தேர்தல் பிரச்சாரத்தில் சொல்லவில்லையா?

அந்தப் பரம்பரை எதிரிகளான ஆரியர்களுக்கு நம் வளர்ச்சியும், சமூகநீதித் திட்டங்களும் பொறுக்குமா?

அமைச்சர் உதயநிதி டுவீட்

"கல்வி நிரம்பி வழிகிறதா என்று பார்க்கிறது திராவிட மாடல்.

கழிவறை நிரம்பி வழிகிறதா என்று பார்க்கிறது ஆரிய மாடல்!" என்று தன் கண்டனத்தைச் சரியாகப் பதிவு செய்திருக்கிறார் திமுக இளைஞரணிச் செயலாளரும், தமிழ்நாட்டின் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

'தினமனு' ஏடு அக்கிரகாரத்தின் கண்ணாடி. பார்ப்பனிய எண்ணவோட்டத்தின் பிரதிபலிப்பு!

இன்னும் பார்ப்பன எதிர்ப்பா? என்று நம்மைக் கேட்கும் ஏமாளிகளுக்கும், ஏமாற்றுப் பேர்வழிகளுக்கும் ஒரு சேர பதில் சொல்லியிருக்கிறது தினமனுவின் இன்றைய தலைப்புச் செய்தி!

விழித்துக் கொள்வோரெல்லாம் பிழைத்துக் கொள்வார்! தமிழர்களே எப்போது விழிக்கப் போகிறீர்கள்? மானமும் அறிவும் இனியாவது வர வேண்டாமா? இந்தத் தினமலரைக் கையால் தொடலாமா? இதற்கு விளம்பரம் கொடுத்து வளர்த்தெடுக்கலாமா?

புறக்கணியுங்கள்! புறக்கணியுங்கள்!! மான உணர்ச்சியோடு புறக்கணியுங்கள்!!

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# கிருஷ்ணகிரியில் மாணவி அனிதா நினைவு நாள்!

## மாணவரணி சார்பில் மலர் தூவி மரியாதை!

கிருஷ்ணகிரி, செப். 2 -

ஒன்றிய அரசு கொண்டு வந்த நீட் தேர்வால் தனது மருத்துவர் கனவு பொய்யானதால் உயிரிழந்த சகோதரி மாணவி அனிதாவின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகில் அனிதாவின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஜெயேந்திரன் தலைமையில் நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

நீட் விலக்கு கோரி ஒன்றிய அரசு மற்றும் ஆளுநர் ரவிக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், ஒன்றிய செயலாளர் தனசேகர் மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர் சங்கர், விவசாய அணி அமைப்பாளர் இளையராஜா, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விஜயராஜ சேகர், மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கௌதம் ராமச்சந்திரன், ஹரிஹரன், மணிபாரதி, உமாவதி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சுரேந்தர்,

முன்னாள் மாணவர் அணி வேல்மணி, நகர மன்ற உறுப்பினர்கள் பாலாஜி, பரந்தாமன், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் கிரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாணவர் அணியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பரிசுகள் வழங்கி சிறப்புரை!

திருவண்ணாமலை, செப்.2-

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பங்கேற்கும், தலைவர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி நடைபெறவுள்ளது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்...

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாநிலத் தலைவர் - வாகை சந்திரசேகர் ஆகியோரின் வழிகாட்டு



தலின்படி, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி மாணவ - மாணவிகளுக்கு, முத்தமிழறிஞர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி சிறப்பாக நடத்தப்பெறவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றை தங்கள் பள்ளிகள் 09, 10, 11, 12 வகுப்புகளில் பயிலும் மாணவ - மாணவியரில் திறம்பட ஒப்பிக்கும் மூவரை தேர்வு செய்து, மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

மாவட்ட அளவில் வெற்றிபெறும் மாணவ-மாணவியருக்கு முதல் பரிசாக ரூ.5,000/மும், இரண்டாம் பரிசாக ரூ. 3,000/மும், மூன்றாம் பரிசாக ரூ. 2,000/மும் வழங்கப்படும். மாவட்ட நடைபெறும் போட்டிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து, பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ-மாணவியர் மண்டல அளவிலான தேர்வுக்கு அழைத்து செல்லப்படுவர். மண்டல அளவில் முதல் பரிசாக ரூ. 10,000/மும், இரண்டாம் பரிசாக ரூ. 5,000/மும், மூன்றாம் பரிசாக ரூ.3,000/மும் வழங்கப்படும்.

மண்டல அளவில் வெற்றி பெறுவோர், மாநில அளவில் நடக்கும் போட்டிகளுக்கு அழைத்துச் செல்லப்படுவர். மாநில அளவில் முதல் பரிசாக ரூ. 25,000/மும், இரண்டாம் பரிசாக ரூ. 15,000/மும், மூன்றாம் பரிசாக ரூ.10,000/மும், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படவுள்ளது.

தங்கள் பள்ளியின் பெயரை மாநில அளவில் உயர்த்திப்பிடிக்கும் திறன்படைத்த மூன்று மாணவ-மாணவியரை தேர்வு செய்து, மாவட்ட அளவில் நடக்கும் போட்டிகளுக்கு 11.09.2023 திங்கட்கிழமைக்குள், பொறுப்பாளர், மாவட்ட தி.மு.க. அலுவலகம், 54, திருக்கோயிலூர் சாலை, சாரோன், திருவண்ணாமலை606 603 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ரூ.72.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் காண்டூர் சமமட்டக்கால்வாய் சீரமைக்கும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். இதில் திருப்பூர் மாநகராட்சி 4ஆம் மண்டலத்தலைவர் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், உடுமலை மத்திய ஒன்றிய கழக செயலாளர் க.செந்தில்குமார், தளி பேரூர் கழக செயலாளர் உதயகுமார், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் மொடக்குப்பட்டி ஈ.சி.ஆர்.ரவி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும்

# தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியக் கூட்டம்!

## வாரியத் தலைவர் நெல்லிக்குப்பம் சு.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப்.2-

டி.எம்.எஸ். வளாகத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்கு கூட்டத்தில், தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்கள் நல வாரியத்தின் நான்காவது வாரியக் கூட்டம் வாரியத் தலைவர் நெல்லிக்குப்பம். சு. புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய வாரியத் தலைவர் நெல்லிக்குப்பம் சு.புகழேந்தி, தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு வாரிய தலைவர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தனது நன்றியை தெரிவித்தார்.

மேலும் காலணி, தோல் அனைத்து தகுதியான தொழிலாளர்களையும் இவ்வாரியத்தில் பதிவு செய்வதற்காக முகாம்கள் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார். சென்று விழிப்புணர்வு உறுப்பினர்களை நியமித்து இவ்வாரியத்திற்கு புத்துயிர் அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த இளைஞர் நலன் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழில் ஈடுபடும் அவர்களது பகுதிகளுக்கு இக்கூட்டத்தில், வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கண் கண்ணாடி வாங்குவதற்கான நல உதவித் தொகை ரூ.500/ லிருந்து ரூ.750/ ஆக உயர்த்தியதற்கும், ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் மாதந்திர ஓய்வூதியம் ரூ.1,000/ லிருந்து ரூ.1,200/ ஆக உயர்த்தி வழங்குவதற்கும், பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களது தேசிய அளவிலான விளையாட்டு குழந்தைகள் போட்டிகளில் பங்கேற்பதற்கு ரூ.25,000/ம் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு ரூ.50,000/ம் ஊக்கத் தொகையாக வழங்குவதற்கும் வாரியத்தின் ஒப்புதல் பெற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர், முனைவர்.எஸ். சுரேஷ்குமார், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இணைச் செயலாளர் திருமதி.எஸ். மணிமேகலை நிதித் துறை சார்பு செயலாளர் ஜெயபிரகாஷ், வேலையளிப்பவர்கள் தரப்பு உறுப்பினர்கள் பங்கேற்றனர். சி.எம்.ஸபருல்லா, சி.ரமேஷ், தொழிலாளர் தரப்பு உறுப்பி னர்கள் வி.கலைநேசன், ஆர். முருகானந்தம், கே.ராமசாமி மற்றும் வாரிய செயலாளர் பா.மாதவன் தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் பங்கேற்றனர்.

## தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (மூன்றாவது பட்டியல்)

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### கோவை மாநகர் மாவட்டம்

தலைவர் - எம். சிவராமன் 44எ, டாக்டர் ராதாகிருஷ்ணன் வீதி, வேலாண்டிபாளையம் அஞ்சல், கோவை 25.

துணைத் தலைவர் - வி. மகாலிங்கம் 253,விளாங்குறிச்சி ரோடு, கோவை4.

அமைப்பாளர் - **எஸ். பூர்ணசந்திரன்** 89, 3வது மாடி கிரே டவுன், காந்திபுரம், கோவை18.

துணை அமைப்பாளர்கள் - சி.பாலகிருஷ்ணன் , 34/35, கே.பி. ஆறுமுகம் தெரு, என்.ஜி.ஆர். காலனி, வரதராஜபுரம், கோவை 15. பி.சக்திவேல் 27/11, மறைமலை அடிகள் நகர், பீளமேடுபுதூர் , பீளமேடு, கோவை 4. எஸ்.தேவசகாயம், 37, பி.பி.சி. காலனி, ஆவரம்பாளையம் , கணபதி, கோவை06. மா.முத்துப்பாண்டி, 23,டி.கே. நாயுடு, பீளமேடுபுதூர், பீளமேடு, கோவை 4. நா.நாகராஜ் 37, கே.சி. தோட்டம், செட்டி வீதி, கோவை 01.

### கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் - ர.ராஜகோபால் 207,பூங்கா நகர், சிவில் ஏர்போர்ட் போஸ்ட் , கோவை 641014

துணைத் தலைவர் - டி.எஸ்.எஸ்.மூர்த்தி 7/29 டி.எஸ்.எஸ். தோட்டம் கணுவாய், சோமையம்பாளையம் கோவை

அமைப்பாளர் - **எம்.செல்வராஜ்** ராஜா தோட்டம் கருப்பராயன் பாளையம், கோவை

துணை அமைப்பாளர்கள் - குமார் 280வடக்கு ஹவுசிங் யூனிட் செல்வபுரம், கோவை காந்தி 3/326 மீனம்பாளையம் மூடுதுரை, புளியம்பட்டி கோவை செம்மேடு துரைசாமி 1சென்னி ஆண்டாள் வீதி செம்மேடு, கோட்டைக்காடு கோவை ஆர்.ஜி. சரவணகுமார் 5/520, குட்டை தோட்டம், தொப்பம்பட்டி, கோவை. இ.நடராஜ் 666பொம்மனம்பாளையம் குப்பனூர் ஊராட்சி அன்னூர் டி.கே. பழனிசாமி 14/5நாவலர் வீதி, இலுப்பம் பாளையம் சிறுமுகை

### கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் - கே.எம்.மயில்சாமி 3/16,கோதவாடி அஞ்சல் கிணத்துக்கடவு கோயம்புத்தூர்642 109

துணைத் தலைவர் - எஸ்.கருப்புசாமி (எ) துரை முள்ளுப்பாடி தாமரைக்குளம் அஞ்சல் கிணத்துக்கடவு

அமைப்பாளர் - **ஜெ.பாஸ்கர்** 9/168 ஜெ.பி.ஆர் இல்லம் கக்கன் வீதி வால்பாறை642 127

துணை அமைப்பாளர்கள் - எம்.ரமேஷ் 3/300,உடையா கவுண்டர் தோட்டம் முத்துக்கவுண்டன்புதூர் அஞ்சல் சூலூர்641406 எம்.வீரப்பன் 5/144 பள்ளிக்கூட வீதி பெத்தநாயக்கனூர் அஞ்சல் ஆனைமலை ஒ.என்.மோகன் குமார் 33,பஜனை கோவில் தெரு ஓடையகுளம், ஆனைமலை பொள்ளாச்சி செ.சுப்பிரமணியம் 18/7,பி.ஆர்.கே. நகர் இருகூர், சூலூர் 641103 பி.எ.செந்தில் குமார் 1,சரண்யா கார்டன் அதியமான் வீதி பொள்ளாச்சி 642001

### தஞ்சை மத்திய மாவட்டம்

தலைவர் - ஆர்.மோகன் வடக்கு தெரு, சீராளூர், தஞ்சை

துணைத் தலைவர் - ஜெ.ராஜராஜன் உப்பரிகை தெரு, மானோஜிப்பட்டி, தஞ்சை

அமைப்பாளர் - **சின்னையன்** தெற்கு தெரு, திருமங்கலக்கோட்டை ஒரத்தநாடு

துணை அமைப்பாளர்கள் - க.சுதாகர் (எ) விஜயகுமார் பெரிய பழங்கொண்டார் தெரு, பொய்யுண்டார்கோட்டை சோ.நந்தகுமார் 1/532 நடுத்தெரு, வடசேரி. டி.சிவக்குமார் நடுத்தெரு, இராய முண்டானபட்டி பூதலூர் ஜி.பி.ரவிச்சந்திரன் வடக்குத்தெரு, மண்டலக்கோட்டை ஒரத்தநாடு கே.தண்டயுபாணி மேலத்தெரு, தெற்கு கோட்டை ஒரத்தநாடு எ.அன்பழகன் ஆதிதிராவிடர் தெரு, திட்டை

### மதுரை மாநகர் மாவட்டம்

தலைவர் - ப.அண்ணாதுரை 4/48,கல்லூரி வீதி ,தாசில்தார் நகர் மதுரை20

துணைத் தலைவர் - எம்.ஆர்.முத்தையா, 7,வ உசி நகர் மெயின் வீதி, பி பி சாவடி, மதுரை16

அமைப்பாளர் - **காவேரி சொக்கலிங்கம்** பிளாட் எண்.15 மீனாட்சி கார்டன் பிரதான சாலை விசாலாட்சிபுரம் புது நத்தம் ரோடு, மதுரை14

துணை அமைப்பாளர்கள் - கா.முனியசாமி 9/13,சி சி ரோடு ,வெங்கடாசலபுரம் மதுரை11 ச.தனபாலன் 3/2,அப்பாதுரை நகர் மூன்றாவது தெரு,கூடல் நகர் மதுரை18 து.கணேசன் டி29 மீனாட்சி பவனம் பங்கஜம் காலனி 2வது தெரு, மதுரை9 'தி.மலர் ராஜா 12எ சூடாமணி காம்பவுண்டு, வைகை வடகரை ,ஆழ்வார்புரம் மதுரை2 பா.மருதுபாண்டியன் 5/1130 பாண்டியன் நகர் 2 வது தெரு, யாகப்பா நகர் மதுரை வை.பாலகிருஷ்ணன் 567 இந்திராநகர் 1 வது தெரு, பீ.பீ.குளம் மதுரை2 ஆ.பால்பாண்டி 63,பாஸ்கர தாஸ் நகர், திடீர் நகர் ஆறாவது பிளாக் மதுரை1 மா.பால்பாண்டி எ230 வீரமுடையான் 4வது தெரு, பழங்காநத்தம் , மதுரை

### கடலூர் மேற்கு மாவட்டம்

தலைவர் - பி.அறிவுடைநம்பி, க.எண்.11.என்.என்.கார்டன், ஆப்பிள்தெரு, பெரியார்நகர் தெற்கு, விருத்தலாசம் தாலுகா மற்றும் அஞ்சல், கடலூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - எ. சிவக்குமார், எண்.202. மேலத்தெரு, செம்பேரி அஞ்சல் மற்றும் கிராமம், பெண்ணாடம் 606105

அமைப்பாளர் - **பூ.மதியழகன்** கோனூர் கிராமம் மற்றும் அஞ்சல், 153/164. மெயின் ரோடு, திட்டக்குடி தாலுகா, கடலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - பி.என். பன்னீர் செல்வம், கிழக்கு தெரு, பழனி நகர், எடச்சித்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், வேப்பூர் தாலுகா, கடலூர் மாவட்டம். அன்பழகன் மெயின்ரோடு, முருகன்குடி அஞ்சல் (ம) கிராமம், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம். மெக்கானிக் சரவணன், எண்.2/3. ராமன் தெரு, ராமச்சந்திரன் பேட்டை, சேலம் மெயின் ரோடு , விருத்தலாசம் தாலுகா மற்றும் அஞ்சல், கடலூர் மாவட்டம். வி. எழில் செல்வம், கே.எ. பெரிய பகண்டை, பகண்டை அஞ்சல், மற்றும் கிராமம் பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம். பெ.கருணாநிதி, 789. புதுகாலணி, தொளாளர் வடக்கு, தாலுக்கா, கடலூர் மாவட்டம். எ.செல்வக்குமார், நெ.114. நடு தெரு , தீவளூர் கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம். எம்.ஆர். திருமாறன் 51/23, திருவள்ளுவர் நகர், நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டம்.

### திருநெல்வேலி மாநகரம்

தலைவர் - எஸ்.எஸ். முத்து 91/67,லஜபதி நகர், மலையாள மேடு, பேட்டை , திருநெல்வேலி.

துணைத் தலைவர் - டி.முருகன் 21/ஏ, பெரிய மருது பாண்டியர் தெரு, மேலக்கருங்குளம், மேலப்பாளையம் , திருநெல்வேலி.

அமைப்பாளர் - **அந்தோணி ஆர்.செலஸ்டின்** ஷெட்டி 12/4, முதல் தெரு, ராஜேந்திரன் நகர், பாளையங்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் - ம. மந்திரமூர்த்தி 684,6வது குறுக்குத்தெரு, மகாராஜநகர், பாளையங்கோட்டை. வர்கீஸ் அமல்ராஜ் 7,செல்வ விநாயகர் கோவில் தெரு, கொக்கிரகுளம், திருநெல்வேலி. ஆ. கர்ணன் 33,மாரியம்மாள் கோவில் தெரு, காமராஜ்பூரம், கொக்கிரகுளம், திருநெல்வேலி. எஸ். வேல்முருகன் 109, வி.வி.கே. தெரு, பேட்டை , திருநெல்வேலி. சர்வேஸ் மைதீன் 6 ஆர்.பி. மேலத்தெரு, பேட்டை , திருநெல்வேலி.

### சென்னை தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் - **எஸ்.பி.அருள்** 1/78,தர்மராஜா கோவில் தெரு, ஷேக் மானியம், போரூர்,சென்னை - 600 116.

துணை அமைப்பாளர்கள் - இ.சேகர் 11, ஈ.வெ.ரா. பெரியார் தெரு, காயத்ரி நகர், அயப்பாக்கம், சென்னை 600077. ஜெ.வெங்கடேசன் 97, பிள்ளையார் கோயில் தெரு, அயப்பாக்கம், சென்னை 600077. இ.தேவராஜ் 3/8,கங்கையம்மன் கோயில் தெரு, ஓடைமாநகர், வானகரம், சென்னை 600095. எ.செல்வம் 1/106, பெருமாள் கோயில் தெரு, அடையாளம்பட்டு, சென்னை 600095. எஸ்.சரவணன் 25,2வது தெரு,கந்தசாமி நகர், மதுரவாயல், சென்னை - 600 095. ஏ.ராகேஷ் 9,வ.உ. சி. தெரு, பொன்னி நகர், காரம்பாக்கம், சென்னை 600 116. எம்.பாலகிருஷ்ணன் 3/1368, காந்திநகர் 7 வது தெரு, கோவிலம்பாக்கம், சென்னை 600 129. எம்.நாட்டார் 55, த.வீ.வ.வாரியம் காலனி, சித்தாலப்பாக்கம், சென்னை 600 126. எஸ்.ஸ்ரீதர் 2/11, அம்மன் கோவில் தெரு, சந்தோஷபுரம், சென்னை 600073. ஏ.ஜெயக்குமார் 8/404, காந்தி தெரு, விஜயநகரம், மேடவாக்கம், சென்னை 600 100. ஜி.மெர்வின் 1/261, காரணை மெயின்ரோடு, அரசன்கலனி, ஒட்டியம்பாக்கம், சென்னை 600130.

### கடலூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - மாங்குடி எஸ்.கிருஷ்ணமூர்த்தி வடக்கு மாங்குடி காட்டுமன்னார் கோவில் வட்டம் கடலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எஸ்.சி.பாலசுப்ரமணியன் செங்கழிநீர்பள்ளம் திருநாரையூர் அஞ்சல் காட்டுமன்னார் கோவில் வட்டம் கடலூர் மாவட்டம் கே.ஆர்.வெங்கடேசன் கிருஷ்ணபுரம் புவனகிரி வட்டம் கடலூர் மாவட்டம்.

### திருச்சி வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எம்.செல்வராசு 32,வடகள்ளர் தெரு, முசிறி- 621211 திருச்சி மாவட்டம், பி. சங்கர் கணேஷ் 36,கணபதிபாளையம் காட்டுபுத்துர் அஞ்சல் தொட்டியம் தாலுகா திருச்சி மாவட்டம் எஸ். மணிவாசகம் காந்தி நகர் பாலசமுத்திரம் தொட்டியம் தாலுகா திருச்சி மாவட்டம்

### திருச்சி மத்திய மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - டி. ஆனந்தன் 39,சின்னசாமி நகர் 4வது குறுக்குத்தெரு, தென்னூர் அஞ்சல், திருச்சி17 எஸ். சந்திரசேகர் திருமணமேடு வாளாடி (வழி) இலால்குடி தாலுகா திருச்சி மாவட்டம்

### அரியலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஜெ.மாரிமுத்து, இளமங்கலம் அஞ்சல் செந்துறை வட்டம் அரியலூர் மாவட்டம் டி. எம்.டி. அறிவழகன், கோரியம்பட்டி, இலையூர், ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.

### சிவகங்கை மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் வே.விஜயகிருஷ்ணன் மேலபூவந்தி, பூவந்தி அஞ்சல் திருப்புவனம் வட்டம் சிவகங்கை ப.பாண்டியன் கள்ளிக்குடி, பெரியகாரை அஞ்சல் தேவகோட்டை வட்டம் சிவகங்கை மாவட்டம் ரா.ரவி தமராக்கி வடக்கு (ம) அஞ்சல் சிவகங்கை வட்டம் சிவகங்கை மாவட்டம் மு.மகேந்திரன் மல்லாகோட்டை அஞ்சல் சிங்கம்புணரி தாலுக்கா சிவகங்கை மாவட்டம்

### விருதுநகர் தெற்கு மாவட்டம்

தலைவர் - து.ரெகுபதி, 1/89,நடுத்தெரு, கோபாலபுரம் அஞ்சல் 626136

துணைத் தலைவர் - எஸ்.பாலன் 85,பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை626101

அமைப்பாளர் - **செ.சரவணக்குமார்** 1/57,கிழக்குத்தெரு நத்தத்துப்பட்டி சாத்தூர்626202

துணை அமைப்பாளர்கள் - பெ.காட்டுராஜன் 481/3,இலங்கிபட்டி புலியூரான் அஞ்சல்626101 சி.கழுகேசன் 618,நடராஜா தியேட்டர் பின்புறம் மேலக்காந்தி நகர் 626203. வி.செல்வம் 10, அய்யம்பட்டித்தெரு, திருவில்லிபுத்தூர்626125. எ.பரமராஜ் வடக்கு கொப்புசித்தம்பட்டி626113 மு.வரதராஜன் இராமலிங்காபுரம்626004

### புதுச்சேரி மாநிலம்

தலைவர் - ரா.நாவப்பன் 27,அய்யனார் கோவில் வீதி, ஜி.என். பாளையம் வில்லியனூர் புதுச்சேரி605110

துணைத்தலைவர் - க.மதிவாணன் 15,தெற்கு தெரு, சேதராப்பட்டு,ஊசுடு புதுச்சேரி605111

அமைப்பாளர் - **ப.தவமுருகன்** 48,மேட்டுத்தெரு, குருவிநத்தம் அஞ்சல், பாகூர், புதுச்சேரி607402

துணை அமைப்பாளர்கள் - ப.அமிர்தலிங்கம் 52,குச்சிப்பாளையம் வீதி பாகூர் அஞ்சல் புதுச்சேரி ஆ.சிவப்பிரகாசம் 12,மதிகிருஷ்ணாபுரம் பாகூர், புதுச்சேரி கி.பழனிசாமி 25,2வது மெயின் ரோடு, லட்சுமி நகர்,சாரம் புதுச்சேரி605013 கு.குமார் 35,மெயின்ரோடு,சின்னகரையான்புத்தூர்,நெட்டப்பாக்கம்,புதுச்சேரி சி. ராமதாஸ் 95, மாரியம்மன் கோவில் தெரு, வி. தட்டாஞ்சாவடி, வில்லியனூர், புதுச்சேரி - 605110, ரா.பாலு, 1,அங்காளம்மன் கோவில் தெரு, பனையடிக்குப்பம் புதுச்சேரி605106 து.கோபி 4,ஐய்யனார் கோவில் வீதி, ஜி.என்.பாளையம், வில்லியனூர் புதுச்சேரி605110 ம.தேவநாதன் 13,புதுத்தெரு,இராமநாதபுரம் தொண்டமாநத்தம், புதுச்சேரி605502 அ.கல்பனா 2,மாரியம்மன் கோவில் தெரு, பாகூர் அஞ்சல், புதுச்சேரி.

### திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

தலைவர் - ஆ.பழனிச்சாமி ஜோகிபட்டி , ஒட்டன்சத்திரம் வட்டம்

துணைத் தலைவர் - மா.கருப்பையா சிங்காரகோட்டை வடமதுரை வழி, வேடசந்தூர் வட்டம்

அமைப்பாளர் - **பி.சி. தங்கம்** நீலாக்கவுண்டன்பட்டி கள்ளிமந்தயம், ஒட்டன்சத்திரம் வட்டம்

துணை அமைப்பாளர்கள் - ரா.பழனிச்சாமி பழைய அரவை ரோடு பாளையம் அஞ்சல், குஜிலியம்பாறை வட்டம் பொ. முத்துச்சாமி சுக்காம்பட்டி, குட்டம் அஞ்சல் வேடசந்தூர் வட்டம் ப.கனகராஜ் தும்மிச்சம்பட்டிபுதூர் ஒட்டன்சத்திரம் அ. தங்கராஜ் புது அத்திகோம்பை, சாலைபுதூர் அஞ்சல் ஒட்டன்சத்திரம் வட்டம் துரை. ராஜா கரிக்காலி, குஜிலியம்பாறை வட்டம் ஆ.பார்த்திபன் வடக்கு தெரு, சாலைபுதூர் ஒட்டன்சத்திரம் வட்டம் சே. அயூப்கான் ரெட்டியபட்டி, வத்திப்பட்டி அஞ்சல் நத்தம் வட்டம் சை.கரிமுல்லா நாகையகோட்டை, கோவிலூர் வழி , வேடசந்தூர் வட்டம். வீ.பன்னீர் செல்வம், கே.ஆண்டிப்பட்டி, கம்பிளியம் பட்டி, சாணார்பட்டி, திண்டுக்கல் வட்டம். பா. சக்திவேல், கரியாம்பட்டி மற்றும் அஞ்சல் ஒட்டன்சத்திரம் வட்டம்.

### திண்டுக்கல் மாநகரம்

தலைவர் - த. ஜெகநாதன் 10/52,ஸ்கீம் ரோடு, ஆர்.வி.நகர், திண்டுக்கல்.

துணைத் தலைவர் - த. முருகசேன் , எம். 134, ஆர். எம்.காலனி , காட்டாஸ்பத்திரி பின்புறம் , திண்டுக்கல்.

அமைப்பாளர் - **சு. பால்ராஜ் ,** 309/84, 8வது தெரு,தெற்கூர் மேட்டுப்பட்டி, எனாமல் பேக்டரி ரோடு பேகம்பூர் அஞ்சல்,திண்டுக்கல்.

துணைஅமைப்பாளர்கள்-ரெ.இராமு,23/2,செல்லாண்டியம்மன் கோவில் தெரு திண்டுக்கல். ப. கண்ணதாசன் , 70பி /3, சாமியார் தோட்டம் , நாகல்நகர், திண்டுக்கல். செ. வீரமணி, 135, ஆர்த்தி தியேட்டர் ரோடு , ஒய். எம். ஆர்.பட்டி, திண்டுக்கல். எம்.கண்ணன் 46,அபிராமி நகர் , சிலுவத்தூர் ரோடு , திண்டுக்கல். எஸ். பி.சுல்தான் , 6/2, முருகன் கோவில் தெரு மேற்கு கோவிந்தபுரம் , திண்டுக்கல்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - ஓ. மகாராஜன் 2/32, பெரும்பாறை மணலூர்-624212

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் ப. செல்வராஜ் வளையாம்பட்டுமற்றும் அஞ்சல் திருவெண்ணெய் நல்லூர் வட்டம் டி. ராமானுஜம் குளக்கரை வீதி, உலகலம்பூண்டி விக்கிரவாண்டி வட்டம் எம். பரசுராமன் நெ.374,நடுத்தெரு, சிறுவானூர் திருவெண்ணெய் நல்லூர் வட்டம்

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

தலைவர் - பி. இராமமூர்த்தி மத்தூர் ஒன்றியம் ஊத்தங்கரை

துணைத் தலைவர் - கோ.வி. செல்வம் எம். வெள்ளபட்டி அஞ்சல் மற்றும் கிராமம் ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - **எம். சத்தியனாராயணமூர்த்தி** நெ.50 தீர்தகிரி வலசை சிங்கராப்பேட்டை ஊத்தங்கரை

துணை அமைப்பாளர்கள் - எம். அசேகான் 3/69,கொண்டப்பநாயணபள்ளி அஞ்சல் மற்றும் கிராமம் பர்கூர் தாலுகா, கிருஷ்ணகிரி பி. வெங்கடாசலம் மங்கலஅள்ளி மகா தேவன கொல்லஅள்ளி போச்சம்பள்ளி கிருஷ்ணகிரி ஜி. சரவணன் சந்தம்பட்டி குள்ளப்பட்டி அஞ்சல் போச்சம்பள்ளி தாலுகா கே. குமரன் காவேரிப்பட்டினம் மேற்கு பி. முனிராஜ் காவேரிபட்டினம் மேற்கு எம். ஜேம்ஸ் ஆலப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல் கிருஷ்ணகிரி வி. சரவணன் 4/188 மோட்டூர் காலனி கிராமம் கனமுட்லு அஞ்சல். கிருஷ்ணகிரி டேம். நாராயணசாமி 3/478 பெரியமுத்தூர் கே ஆர் பி அணை கிருஷ்ணகிரி ஜெ. சீனிவாசன் பனமரத்துப்பட்டி கீழ்குப்பம் அஞ்சல் ஊத்தங்கரை கே.பி. ஆசைதம்பி சாமல்பட்டி அஞ்சல் மத்தூர் தெற்கு ஒன்றியம் ஆர். சுப்பரமணி காவேரிப்பட்டினம் கிழக்கு சி. ஸ்ரீதர் சோபனூர், தட் ர அள்ளி அஞ்சல் கிருஷ்ணகிரி

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - ஆ.ராஜா எண்.188,முத்தமிழ் வீதி திருவேங்கடாபுரம் பொன்னேரி 601204

துணைத் தலைவர் - ஜி.கணேசன் ஒதப்பை கிராமம் மற்றும் அஞ்சல் ஊத்துக்கோட்டை வட்டம்

அமைப்பாளர் - **டி.மணி** எண்.2/38 எல்.ஆர்.மேடு கிராமம் ஆரம்பாக்கம் அஞ்சல் கும்முடிப்பூண்டி வட்டம் 601201

துணை அமைப்பாளர்கள் - சா.தியாகராஜன் எண்.1/67 மண்ணடி தெரு,எளாவூர் கிராமம் கும்முடிப்பூண்டி வட்டம் 601201 எ. யுகேந்திரன் எண்.461,சூரவாரி கண்டிகை கிராமம் சிறுபுழல்பேட்டை அஞ்சல் கும்முடிப்பூண்டி வட்டம் 601201 பு.சுதாகர் இந்திராகாந்தி தெரு, ஞாயிறு கிராமம் மற்றும் அஞ்சல் சென்னை 600 067 பி.கே. நாராயணசாமி எண்.18,ராமர் கோவில் தெரு, பாகல்மேடு, வெங்கல் அஞ்சல் ஊத்துக்கோட்டை வட்டம் பி.எஸ்.இரமேஷ் எண்.223 பெருமாள் கோவில் தெரு, பனையஞ்சேரி,ஊத்துக்கோட்டை எல். உதயகுமார் என்.14 கோமிட்டி பேட்டை ஆரணி 601101 ஆர். பார்த்தசாரதி கொண்டமாநல்லூர் கிராமம் ஏடூர் அஞசல், கும்முடிப்பூண்டி - 601201. கே. அரி 184, பெருமாள் கோவில் தெரு, திருவெள்ளவாயல் - 601203. ஜெ. பாலச்சந்தர் 82, எம்.ஜி.ஆர். தெரு, தடம் பெரும்பாக்கம், பொன்னேரி - 601204. எம். சுப்பிரமணி ஜனப்பசத்திரம், அழிஞ்சிவாக்கம், சென்னை - 600067.

### மயிலாடுதுறை மாவட்டம்

தலைவர் - டி.விசேஸ்வரன் அம்பேத்கர் காலனி செம்மங்குடி609104

துணைத் தலைவர் - கே.மகேந்திரன் தோப்புதெரு,மேக்கிரி மங்கலம், பழைய கூடலூர், குத்தாலம் தாலுகா

அமைப்பாளர் - **இரா.மனோகரன்** அக்ரஹாரம், திருமணஞ்சேரி அஞ்சல் குத்தாலம் தாலுகா மயிலாடுதுறை

துணை அமைப்பாளர்கள் - ஆர்.செல்வமுத்துகுமார் 4B,நங்கநலத்தெரு, திட்டை ரோடு, தென்பாதி, சீர்காழி எ.மோகன் 5/66,வள்ளலார் வீதி, மங்கநல்லூர், குத்தாலம் தாலுகா மயிலாடுதுறை பா.குலோத்துங்கன்9/169எ,மேலசாலை,காரைமேடு, சீர்காழி சூ.முத்துகருப்பன் ஆளப்பள்ளம் ஊராட்சி நல்லூர் அஞ்சல், சீர்காழி தாலுகா கே.சந்துரு தெற்கு மேட்டுத் தெரு எருக்கட்டாஞ்சேரி அஞ்சல்,தரங்கம்பாடி தாலுகா பொன்.ராஜா 4/19,மேலவேளித்தெரு,மேலையூர், பூம்புகார் இரா.செந்தில் 6/50,மேலத்தெரு திருக்கடையூர், தரங்கம்பாடி தாலுகா ஆ. பிரேம்குமார் 2/85,கீழத்தெரு, திருச்சிற்றம்பலம் மயிலாடுதுறை609204 கோவி.உமாபதி மன்மதன் கோவில் தெரு,காளி போஸ்ட் மயிலாடுதுறை தாலுகா609811 எ.இளையராஜா 41எ,தெற்கு தெரு,பனமங்கலம் சீர்காழி, மயிலாடுதுறை ந.கனகராஜ் 1/101, பிள்ளையார் கோவில் தெரு, மேலையூர், தரங்கம்பாடி, மயிலாடுதுறை.

### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் - க. அருண் தவசுபாண்டியன் 7/109, சின்ன சங்கரன் கோவில் ரோடு சிவந்திபுரம், அம்பாசமுத்திரம் வட்டம்.

துணைத் தலைவர் - மா.சுடலைமுத்து, ஊராட்சி மன்றதலைவர் 4/79B, தேவர் தெரு, செங்குளம், பாளை தாலுகா

அமைப்பாளர் - **மு.ராஜ சங்கரலிங்கம்** எஸ்2, தாமிரபரணி அப்பார்ட்மெண்ட் மனோ தெரு, என்.ஜி.ஒ. "ஏ " காலனி 627007

துணை அமைப்பாளர்கள் - சி.ஐயப்பன் 88, முடுக்கு தெரு, சேரன்மகாதேவி. பெ. வெங்கடேசன் 28ஏ 1,1ஏ, செங்குளம் காலனி, கோபாலசமுத்திரம். ' ஆச்சியூர் எம்.ராமசாமி 14ஏ,மேலத்தெரு, வடக்கு ஆச்சியூர் தளபதிசமுத்திரம் அஞ்சல் 627101 ந.சண்முகவேல் 23,சங்கரன் கோவில்ரோடு , அம்பாசமுத்திரம். சு.சிதம்பரம் 386, வடக்குதெரு, வாகைகுளம். எஸ்.பூதப்பாண்டியன் அயன்சிங்கம்பட்டி, அம்பாசமுத்திரம் தாலுக்கா. க. குமரகுரு 42/86, பெருமாள் கோவில் தெரு, வள்ளியூர் சு. கருப்பசாமி பாண்டியன் 165, கீழக்காடுவெட்டி, வடக்கு அப்பர்குளம் களக்காடு ஒன்றியம். ஆர்.தனகிருபா 278எ. பனிசகுளம் கண்ணநல்லூர் 627109 பி.முத்துகுமார் 18/1, வடக்கு தெரு, வடக்கு குமிளம்பாடு627109 சு.ஆறுமுகம் தெற்கு தெரு, தெற்கு பாப்பான்குளம் வீ.மணி 7/29,அரியகுளம் பாளையங்கோட்டை

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

தலைவர் - வே.செண்டு 11/53, இந்திரா நகர், காட்டாம்புளி, பாலாமடை , மானூர் போஸ்ட்.

துணைத் தலைவர் - சு. சப்பாணி இரயில்வே பீடர் ரோடு, நடுக்கல்லூர் 627010

அமைப்பாளர் - **ப. கருப்பசாமி** 267, போலீஸ் காலனி, சாந்தி நகர் பாளையங்கோட்டை627002.

துணை அமைப்பாளர்கள் - என்.கோபால் ராமானுஜம் 8/12, மெயின்ரோடு, நடுக்கல்லூர், திருநெல்வேலி 627010. மா.ஷாஜகான் சங்கரங்கோவில் மெயின் ரோடு , மானூர், திருநெல்வேலி எஸ். நயினார் 15/5, பிள்ளையார் கோவில் தெரு, பாலாமடை போஸ்ட் 627 359 என். துரை பாண்டியன் 1/2, கீழத்தெரு, எஸ்.குப்புனாபுரம் , மானூர் ஒன்றியம். எஸ். பழனி 122, பிள்ளையார் கோவில் தெரு , குப்பக்குறிச்சி , சீவலப்பேரி போஸ்ட் திருநெல்வேலி. வே. வெயிலப்பன் சுத்தமல்லி, திருநெல்வேலி.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

தலைவர் - ஏ.பி.ஆர்.ராஜாங்கம் 3/309 அத்திப்பள்ளம் ,விராலிமலை புதுக்கோட்டை மாவட்டம்

துணைத் தலைவர் - ம.தரணிரமேசு 27,உசிலங்குளம் 2ஆம் தெரு, புதுக்கோட்டை மாவட்டம்

அமைப்பாளர் - **சி.அரங்கநாயகம்** 5697,சாந்தநாதபுரம் புதுக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - து.கண்ணன் பாலண்டாம்பட்டி ,குளத்தூர் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம் சி.ஜெயராமன் சத்தியமங்கலம் ,அன்னவாசல் புதுக்கோட்டை மாவட்டம் எம். ஆறுமுகம் 60,பழனியப்பா நகர், திருக்கோகர்ணம் புதுக்கோட்டை மாவட்டம் செ.விஜயகுமார் பொன்னம்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம் சிவ.சண்முகம் 227,சித்தாம்பூர், நீர்பழனி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம்622515 ப.வெங்கடேசன் புதுக்கோட்டை விடுதி, காடாம்பட்டி அஞ்சல் புதுக்கோட்டை மாவட்டம் கே.தங்கராசு சித்தன்னவாசல், இலுப்பூர் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம் ஆர். ராஜாங்கம் திருமணஞ்சேரி,கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம் சு.இளையராஜா செங்களூர் ,குளத்தூர் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம்

### தூத்துக்குடி மாநகரம்

தலைவர் - என்.மாரிமுத்து 5/87,எம்.தங்கம்மாள்புரம் முத்தையாபுரம், தூத்துக்குடி5

துணைத் தலைவர் - பா.பாண்டியராஜன் 170,அழகேசபுரம் முதல் தெரு, தூத்துக்குடி

அமைப்பாளர் - **எஸ்.முத்துவேல்** 2/518,வடக்கு தெரு, முத்தையாபுரம், தூத்துக்குடி628005

துணை அமைப்பாளர்கள் - எஸ்.பாஸ்கரன் 63B/1,கந்தசாமிபுரம் தூத்துக்குடி ஆர்.ரவீந்திரன்281/39எ,திரேஷ்புரம்தூத்துக்குடி628001 எஸ்.அங்குசாமி 102/20,குறிஞ்சி நகர் 7வது தெரு, தூத்துக்குடி2 கு.பாலமுருகன் 5/137,அய்யப்பநகர் 3வது தெரு, தூத்துக்குடி பெ. மாரியப்பன் 63பி,கிருஷ்ணராஜபுரம் தூத்துக்குடி

### நாகப்பட்டினம் மாவட்டம்

தலைவர் - வே.கோவிந்தசாமி நடுக்காடு, தகட்டூர் வேதாரண்யம் தாலுக்கா

துணைத் தலைவர் - கோ.சிவக்குமார் 1/108,புளியந்தோப்புத்தெரு கங்களாஞ்சேரி அஞ்சல், நாகப்பட்டினம் தாலுக்கா

அமைப்பாளர் - **ஆர்.துரைராஜ்** மணிவான்குத்தகை ஆயக்காரன்புலம்3, வேதாரண்யம் தாலுக்கா

துணை அமைப்பாளர்கள் - ஜி.எல்.அம்பிகாபதி வடக்காலத்தூர் பட்டமங்கலம் (PO) கீழ்வேளூர் தாலுக்கா சோ.மோகன் 4.எ, பிராந்தியங்கரை வேதாரண்யம் தாலுக்கா நாகப்பட்டினம். எஸ். வெங்கடாசலம் மகாராஜபுரம், மேல்பாதி துளசாபுரம் அஞ்சல் வேதாரண்யம் கி.பாபு (எ) சிவதாஸ் பெருமைக்கோன்காடு பஞ்சநதிக்குளம் வேதாரண்யம் க.இளஞ்செழியன் 34/40, வாணியத்தெரு திட்டச்சேரி அஞ்சல், நாகப்பட்டினம் தாலுக்கா எஸ்.ஏ. பாலசுப்பிரமணியன் 455, வலியான் செட்டிக்கட்டளை, மருதூர் வடக்கு வேதாரண்யம் தாலுக்கா கே.செந்தில்குமார் பசுக்கிடைவேளி தெற்கு பணையூர் 119 அனக்குடி வலிவலம் அஞ்சல், திருக்குவளை தாலுக்கா வி.எஸ். பரமசிவம் 2/463, உதயராசபுரம் வாய்மேடு மேற்கு வாய்மேடு அஞ்சல் வேதாரண்யம் தாலுக்கா

லோகநாதன் நெ.2/448,மேல நாட்டிருப்பு தெற்கு பனையூர் ஊராட்சி கீழ்வேளூர் ஒன்றியம் நாகை ராஜேந்திரன் நெ.4/39,சிவன் தெற்கு தெரு, சிக்கவலம், புலியூர், நாகை.

### இராணிப்பேட்டை மாவட்டம்

தலைவர் - சி.ஜி.சண்முகம் சித்தேறி கிராமம் மற்றும் அஞ்சல், நெமிலி வட்டம்

துணைத் தலைவர் - எ.ஜி.ராஜா எண்.862, பள்ளத்தெரு, வளயாத்தூர் ஏ டி சி வளையாத்துர் கிராமம் மற்றும் அஞ்சல், கலவை வட்டம்.

அமைப்பாளர் - **ராமலிங்கம்** நெ.41எ,ஈஸ்வரன் கோவில் தெரு, மேல்பாக்கம் கிராமம், அரக்கோணம் வட்டம், இராணிப்பேட்டை

துணை அமைப்பாளர்கள் - சிவக்குமார் கோவிந்தராஜ் நெ.5/125 சாமுண்டீஸ்வரி கோவில் தெரு, இச்சிபுதூர் கிராமம் மற்றும் அஞ்சல் அரக்கோணம் ப.பழனி முள்வாய் ஆனைப்பாக்கம் அஞ்சல் அரக்கோணம் (கி) ஒன்றியம், டி.ஜி.தண்டபாணி எண்.59,வேளாளர் தெரு,பனப்பாக்கம் நெமிலி வட்டம் இராணிப்பேட்டை தினகரன் ஐயப்பன் பேட்டை சேரி நெமிலி வட்டம் இராணிப்பேட்டை. கே. பன்னீர் செல்வம் நெ.125 ஒத்தவாடை தெரு,பெரிய தகரகுப்பம் செங்காடு அஞ்சல் வாலாஜா பி.தணிகைவேல் நெ.1/48,மேட்டுத்தெரு, கே.வேலூர் கிராமம் மற்றும் அஞ்சல் (வழி) கலவை, ஆற்காடு வட்டம் 632506

### தருமபுரி கிழக்கு மாவட்டம்.

துணை அமைப்பாளர் - எ. சரவணன் வெள்ளக்கால், டொக்கு போதனஅள்ளி அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 31-08-2023

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி




முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் மோளையானூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 62 மாணவ, மாணவியர்க்கு காலை உணவு வழங்கி தொடங்கி வைத்தார். இதேபோல் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.எஸ்.சரவணன், அஜ்ஜம்பட்டி ஊராட்சி நடுநிலை பள்ளியிலும், மொரப்பூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மா.ரத்தினவேல், கொங்கரப்பட்டி ஊராட்சி அரசு பள்ளியிலும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தினை துவக்கி வைத்து மாணவ, மாணவியருடன் உணவு அருந்தினர்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில், சுற்றுலாத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்துவது குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ் ஆகியோர் முன்னிலையில் 30.08.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் இரா.அருள் முருகன், மண்டல மேலாளர் (சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மதுரை) டேவிட் பிரபாகரன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் குருச்சந்திரன், சுற்றுலா அலுவலர் திருவாசன், திருச்செந்தூர் வட்டாட்சியர் வாமனன் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# மும்பையில் 'I.N.D.I.A.' கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்!



















# உடன்பிறப்பே... 21

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த சி.நா.மீ. உபயதுல்லா அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**




## சி.நா.மீ. உபயதுல்லா:

## தஞ்சை தீரர்!

தஞ்சாவூர் நகரம் கலைகளை வளர்த்த நகரம் மட்டுமல்ல, கழகத்தை வளர்த்த நகரமும் கூட. ஆம், கழகத்தின் கொடி முதன்முதலில் ஏற்றப்பட்ட நகரங்களில், கலைஞர் போராட்டக் களம் கண்ட நகரங்களில் தஞ்சைக்கு எனத் தனி இடம் உண்டு. காவிரிக் கரைகளில் பொங்கும் புதுப்புனல் போல கழகமும், தஞ்சையும் இணைபிரியா வரலாறு கொண்டவை.

அங்கு இலக்கியமும் செழுமையானது. மரபு, நவீனம் என படைப்புலகில் கொடி நாட்டியவர் பலர். நகரத்தின் ஏதாவது ஓர் இடத்தில் தினமும் இலக்கியக் கூட்டம் நடக்கும். அங்கு தவறாமல் இருப்பார் கழகத்தின் நகரச் செயலாளர்.

இலக்கியவாதிகளுக்கு எல்லாம் அவர்தான் புரவலர். சிறப்புப் பெயரிட்டு அவரை 'இலக்கியக் காவலர்' என்பார்கள். ஆனால் அவர், இலக்கியக் காவலர் மட்டுமல்ல, எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கத்துக்குத் தஞ்சையின் கழகக் காவலர். அந்தத் தளகர்த்தரின் பெயர் சி.நா.மீ.உபயதுல்லா.

### கலைஞரின் கண் அசைவில்...

1962-ஆம் ஆண்டு கழகம் சந்தித்த இரண்டாவது பொதுத்தேர்தலில் தஞ்சாவூரில் போட்டியிட்டார் கலைஞர். அவரை எதிர்த்து நின்றவர் மிகப்பெரிய செல்வந்தர். செல்வாக்குமிக்க காங்கிரஸ் காரர். கலைஞர் வெற்றிபெறுவது கடினம் என அன்றைக்கு ஆரூடம் சொன்னார்கள். ஆனால், ஆரூடங்களைத் தவிடுபொடியாக்கி 38 வயதில் இரண்டாவது முறையாக சட்டமன்றம் சென்றார், கலைஞர்.

தேர்தல் களத்தில் கலைஞருக்காக அணில் பிள்ளையாக ஓடிக் கொண்டிருந்தார் 21 வயது அந்த இளைஞர். அதன்மூலம் கலைஞரின் நன்மதிப்பைப் பெற்ற அந்த இளைஞர்தான் 'இலக்கியக் காவலர்' என பின்னாட்களில் பெயரெடுத்தார். கலைஞரின் தஞ்சைப் பயணங்களில் 'கலைஞரின் காவலர்' எனப் பெயர் பெற்றார்.

**1962-ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் கலைஞரின் அணிலாக நின்றார் உபயதுல்லா. கழகத் தலைவரான பின்னும் கலைஞர் அந்த இளைஞனை மறந்துவிடவில்லை.**

### தத்தெடுத்துக் கொண்ட தஞ்சை!

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அபிராமம் என்கிற ஊரில் 1941-ஆம் ஆண்டு பிறந்தவர் உபயதுல்லா. தொழில் நிமித்தம் தஞ்சை வந்தவர்கள் அவரின் பெற்றோர். ஜவுளித் தொழில், பேன்சி பொருட்கள் கடையும் நடத்தி வந்தனர். அந்தத் தொடர்புகளில் கழகத்தில் தொடர்பும் சேர்ந்துகொள்ள, தஞ்சைத் தெருக்களில் கழகக் கொடிபிடிக்கத் தொடங்கினார் .

திருவாரூரில் பிறந்தாலும் கலைஞரின் அரசியல் களம் தஞ்சையை மையம் கொண்டது எனலாம். 1951-ஆம் ஆண்டு, தஞ்சையில் ராஜாஜிக்குக் கருப்புக் கொடி காட்டும் போராட்டம் உட்பட, பல போராட்டங்களின் தஞ்சாவூர் தளபதி கலைஞர்தான். தஞ்சையில் கலைஞரின் குரலையும், கொள்கையையும், தமிழையும் கேட்ட இளைஞர்கள் துடிப்பேறி நின்றனர். அப்படித்தான் 1962-ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் கலைஞரின் அணிலாக நின்றார் உபயதுல்லா. கழகத் தலைவரான பின்னும் கலைஞர் அந்த இளைஞனை மறந்துவிடவில்லை.

### கழக வாழ்க்கை கலக வாழ்க்கை

கழகத்தின் போராட்டங்கள், சிறைகள், களப்பணிகள் எல்லாம் தலைவர்களுக்கு மட்டுமல்ல, அடிமட்டத் தொண்டர்களும் குண்டாந்தடி சந்தித்த நினைவுகள் கொண்டவர்களே! அந்த வரிசையில் தஞ்சாவூரில் துடிப்புமிக்க உபயதுல்லாவும் சந்தித்த துயர்கள் ஏராளம்.

சிறுபான்மைச் சமூகத்தில் இருந்து கழகக் கொடி பிடித்தவர் என்பதால், சொந்தங்களுக்குள் புறக்கணிப்புகளும் ஏராளம். இப்படியாக சமரசமற்ற கொள்கைக்காரரான உபயதுல்லாவுக்கு நகரச் செயலாளர் என்கிற இருக்கையை 1987-ஆம் ஆண்டு அளித்தார் கலைஞர். தஞ்சாவூர் நகரத்தில் கழகத்தின் ஏற்றத்துக்கும் இறக்கத்துக்கும் ஏறப 27 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் 2014-ஆம் ஆண்டு வரை திறம்பட நின்றவர். தஞ்சாவூர் கழகத்தின் கோட்டையானதற்கு, உபயதுல்லா சிந்திய வியர்வைத் துளிகளும் பங்கு கொள்ளும்.

### நம்பிக்கை நாயகர்

1989- ஆம் ஆண்டில் தஞ்சாவூர் தொகுதியில் உபயதுல்லாவுக்கு வாய்ப்பு வழங்கினார் கலைஞர். முதல் வெற்றியைப் பதிவு செய்து கலைஞரின் நம்பிக்கையைக் காப்பாற்றினார்.

இரண்டாவது முறையாக 1991- ஆம் ஆண்டில் மீண்டும் தஞ்சை தொகுதிக்கு உபயதுல்லா பெயரை 'டிக்' செய்தார் கலைஞர். அது அவருக்குத் தெரியாது, ஆனால், கலைஞரைச் சந்திக்கையில், "தலைவரே... எனக்குச் சட்டமன்றத் தேர்தலில் இரண்டாவது முறையாகப் போட்டியிட வாய்ப்பு வழங்கவில்லை என்றாலும் பரவாயில்லை; தஞ்சாவூர் நகரச் செயலாளர் என்ற கட்சிப் பொறுப்பை மட்டும் தொடர அனுமதியுங்கள்; நீங்கள் நிறுத்தும் வேட்பாளரை வெற்றிபெறச் செய்கிறேன்!" என்றார்.

"போய்த் தேர்தல் வேலைகளை ஆரம்பியுங்கள்; நீங்கள்தான் வேட்பாளர்!" என்று சொல்லி அனுப்பினார் தலைவர். இப்படி நெருக்கமான தளகர்த்தராக, தொண்டனாகத் திகழ்ந்தவர் உபயதுல்லா.

தொடர்ச்சியாக, 1996, 2001, 2006-ஆம் ஆண்டுகளில் தஞ்சாவூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிகளைக் குவித்தவர். அதற்காக 2006-2011 கழக ஆட்சியின்போது வணிக வரித்துறை அமைச்சராக்கி தஞ்சாவூர் வாக்காளர்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சியைக் கொடுத்தார் கலைஞர்.

### தமிழ்ப் பணி

தமிழ் ஆர்வலர் என்பதும், உபயதுல்லாவின் அடையாளம். அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களில் தமிழார்வம் தழையும். திருக்குறள் மேற்கோள் இல்லாமல் அவரது உரை நிறைவுறாது. அவரது கழகப்பணியும், தமிழ்ப்பணியும் அறிவார் கலைஞர். அதனால்தான் 2020- ஆம் ஆண்டில் கலைஞர் விருதும், 2023- ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா விருதும் அவருக்கு வந்து சேர்ந்தன.

கலைஞரின் டெல்டா மாவட்டச் சுற்றுப்பயணங்கள் தஞ்சாவூரில் இருந்துதான் தொடங்கும். அவர் வந்து இறங்கும் 'உழவன் எக்ஸ்பிரஸ்' ரயில் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் நுழைந்தால், அந்த அதிகாலையில் ரயிலடியே திருவிழாக் கோலம் பூண்டிருக்கும். உபயதுல்லாவின் வரவேற்புடன் கலைஞரின் பயணம் தொடங்கும். கூடவே, கலைஞரின் காவலராக உபயதுல்லாவும் உடன் செல்வது கழகத்தினர் கண்ட காட்சிகள்.

### பெரியார் பேச்சும் கலைஞர் வீச்சும்

1962 இல் தஞ்சாவூரில் போட்டியிட்ட கலைஞரைத் தோற்கடிக்க வேண்டும் எனப் பெரியார் வந்து பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார். அந்தப் பேச்சினை ஒரு ஓரமாக இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார் கலைஞர். தனது பேச்சின் தொடக்கத்தில், முதல் 10 நிமிடங்கள் கலைஞரின் பெருமைகளைப் புகழ்ந்து பேசிவிட்டு, அதன் பின்னர் "அப்படி இருந்தவர்கள் மாறிவிட்டனர். அவர்களை ஆதரிக்க வேண்டாம்" என நீண்ட நேரம் பேசி இருக்கிறார்.

அவர் பேச்சை முடிப்பதற்குள், அவர் கையில் கலைஞர் குறித்து, அவர் முதலில் பேசிய பேச்சுகள் கொண்ட துண்டறிக்கை கொடுக்கப்பட்டது. அதில் 'பெரியார் பாராட்டிய கலைஞர்' என அன்றைய தேதியுடன் அச்சடிக்கப்பட்டிருந்தது. ஒரு மணி நேரத்துக்குள் அந்தப் பிரச்சாரத் துண்டறிக்கையைப் பார்த்த பெரியார், 'கலைஞரை ஜெயிப்பது கடினம்' எனச் சொல்லிவிட்டுச் சென்றார். கடைசியில், அதுதான் நடந்தது. கலைஞர் நினைத்த வேகத்துக்கு, அந்த வேலையைச் செய்து முடித்த தம்பிகளில் ஒருவர் உபயதுல்லா.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி அவர் மறைந்தபோது, திருவாரூர் மாவட்டப் பயணத்துக்குச் சென்ற நமது முதலமைச்சர், **'உபயதுல்லா இல்லம்'** சென்று தனது துயரத்தினைப் பகிர்ந்து கொண்டார். அவர் இல்லாத தஞ்சை நகரத்தை எப்போதும் கழகக் கோட்டையாக வைத்திருப்பதே அவருக்குக் காட்டும் அன்பு என்பதைச் சொல்லாமல் சொல்லிச் சென்றார். அதைத் தஞ்சைக் கழகம் அறியும்.

**...துடிக்கும்**

### இந்தியாவுக்கான பாடம்!

ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) சமீபத்தில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை குறித்துப் 'பிரிக்ஸ்' நாடுகளுக்கிடையில் நிலவும் வேறுபாடுகளை இவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

இந்தியாவில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக 74 சதவிகிதம் பேர் சத்தான உணவை நுகர முடிவதில்லை என்றும், அதனால் 'பிரிக்ஸ்' நாடுகள் பட்டியலில் இந்தியா கடைசி இடத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவிட் தொற்றுக்குப் பிறகு இந்தப் போக்கு மேலும் அதிகரித்திருப்பதாக இவ்வறிக்கை கூறுகிறது.

ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சியில் பெரும் தேக்கம் நிகழ்கிறது. ஊட்டச்சத்துக் குறைபாடின்றி வளரும் குழந்தைகள் அறிவாற்றல் நிறைந்தவர்களாக வளர்கிறார்கள் என்று சுகாதாரத் துறை ஆய்வுகள் கூறுகின்றன. 'திராவிட மாடல்' அரசு முன்னெடுக்கும் காலை உணவுத் திட்டம் இந்தியாவுக்கு வழிகாட்டும் என்று சொல்வது வெறும்பேச்சாக நின்றுவிடப் போவதில்லை. இந்தியா முழுக்க இத்திட்டம் தேவைப்படுகிறது என்பதைத்தான் 'பிரிக்ஸ்' அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

### :ப்ளாஷ்பேக்



### நாணயமும் பாராட்டும்!

1981-ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் உள்ள சொக்கம்பட்டி என்கிற எங்கள் சிறிய கிராமத்தில் கழகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்துக்குச் சிறப்புரையாற்ற கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அப்போதெல்லாம் கழகப் பொதுக்கூட்டங்களில் தலைவருக்கு எடைக்கு எடை நாணயம் வழங்குவது வழக்கம். அதனால், எங்கள் ஊர் நிகழ்ச்சியிலும் தலைவருக்கு எடைக்கு எடை நாணயம் வழங்கப்பட்டது. சிறிய கிராமமாக இருந்தாலும், எங்களது அந்த முயற்சியை தலைவர் மேடையிலேயே பாராட்டினார். அப்போது 'முரசொலி' ஏஜென்ட் என்ற முறையில் அதற்கு எனது பங்களிப்பைச் செலுத்தினேன். அந்நாளில் கலைஞருக்கு ரூ.6,700/- வழங்கினோம். என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி.



சங்கரலிங்கம்

**-ஆர்.சங்கரலிங்கம்,**
**பள்ளி ஆசிரியர் (ஓய்வு), சொக்கம்பட்டி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### கழகத்துக்குக் கட்டுப்படுதல்!

**1969-ஆம் ஆண்டு, பேறறிஞர் அண்ணா மறைவுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை கலைஞர் ஏற்றதும் கழகத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டபோது, பெரியார் அதைச் சரிசெய்ய முயன்றார். பிப்ரவரி 15-ஆம் தேதி 'விடுதலை'யில் அது தொடர்பாக எழுதுகையில், பவுத்த ஸ்தான முறையுடன் ஒப்பிட்டுக் கழகக் கட்டுப்பாட்டினை வலியுறுத்தினார். "1. தலைவனுக்குக் கீழ்ப்படிதல், 2. கொள்கைகளுக்குக் கீழ்ப்படிதல் 3. ஸ்தாபனத்தைக் கவுரவப்படுத்துதல். இம்மூன்றும் முறைப்படி இல்லாதவர் ஸ்தாபனத்துக்குக் கட்டுப்பட்டவரல்ல என்பதுதான் பொருள்" என எழுதினார்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 228




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131